உ ஜேபான்

புத்தகம் 1. மலர் 1

அக்டோபர் 1904.


Jun 21, 1904
F 04.1.1
144689

THE

# "PLOUGHMAN."

A

*Monthly Journal in Tamil*

TO HAVE A WIDE CIRCULATION

IN

The Tamil Districts of the Presidency

AND

A GREAT BOON BESTOWED UPON THE

## VILLAGERS.

## "உழவோன்."

புத். 1.] மதராஸ், 1904௵ அக்டோபர்௴ 15உ [பிரதி. ...].

BY

K. L. MUTHUSAMY IYER.

*Madras;*

PRINTED AT THE PANDITHA MITHRA PRESS.

வருஷச் சந்தா 2-4-0. } 1904. { காபி 1-க்கு

CONTENTS. Page


| | |
|---|---|
| உழவர் சிறப்பு | 1 |
| அமெரிக்காவில் விவசாயப்படிப்பு | 4 |
| நீராதார வேலைகள் | 6 |
| விவசாயிச்சங்கங்கள் | 8 |
| மெல்ரோஜாபுரம் பண்ணை | 13 |
| பயிருணவு மூலப்பொருள்கள் | 17 |
| பம்பாயில் விவசாயம் கைத்தொழில்களின் காக்ஷி | 19 |
| மதராஸ் ஹைகோர்ட்டுதீர்ப்பு | 22 |
| தழை எரு | 24 |
| வர்த்தமானக்குறிப்பு | 2 |


144689


THE

# PLOUGHMAN.

# உழவோன்.

மதராஸ் கவர்ன்மெண்டு தமிழ்ஜில்லாக்களிலுள்ள
விவசாயிகள் விவசாயச் சீர்திருத்தமும்
விவகார ஞானமுமடையும்பொருட்டு
மாதாந்தரம் வெளியாகும்.

புஸ்தகம் 1.] மதராஸ் 1904ளு அக்டோபர்மீ 15௳ [பிரதி 1.


## உழவர் சிறப்பு.

பூலோகத்தில் மனிதர் கைப்பற்றி ஜீவித்து வரும் பலதொழில்களில் விவசாயத்தொழில் சிறந்தது. இதுவே முதன்மையாவனது. இதற்குப் பிற்பாடுதான் மற்றத்தொழில்கள். விவசாயப்பொருளாலன்றோ சகல ஜனங்களும் ஜீவித்து உலாவுவது. விவசாயமே எல்லாத்தொழில்களுக்கும் அஸ்திவாரம். அஸ்திவாரமில்லாத ஒரு கட்டடம் சொற்பநாள்கூட நிலைத்து நிற்பது அருமை. அதுபோலவே விவசாயத்தொழில் இல்லையாகில் இதர தொழில்கள் நிலைப்பது அரிது. விவசாயம் சரியாய் நடந்துவந்தால்தான் மற்றத்தொழில்களும் சரிவர நடந்தேறிவரும். விவசாயம் பலஹீனப்பட்டால்மற்றைத்தொழில்களும் பலஹீனமடையும். விவசாயம் கேட்டையடைந்தால் மற்றைத்தொழில்களும் கேட்டையே யடையும். விவசாயம் அடியோடே மாண்டால் மானிடப்பூண்டிற்கே கெடுதி சம்பவிக்கும். பண்டமிருந்தாலன்றோ உயிர் வாழலாம், விவசாயத்தாலன்றோ பண்டம் உண்டாவது. பண்டம் ஏராளமாய் விளைந்தால்தானே வர்த்தகம் பரவும். வர்த்தகம் பரவி ஓங்கினால் தானே ராஜ்யத்திற்கு செல்வமும் பலமும் கண்ணியமும் உண்டாகும். ஆகையால் சகலத்திற்கும் ஆதாரம் விவசாயத்தொழிலே.

இப்பூமியில் ஏற்பட்டுள்ள தொழில்களை எல்லாம் மூன்று வகுப்பாக பிரிக்கலாம். அதாவது உத்தியோகம், வர்த்தகம், விவசாயம். புத்திமான்கள் சிறிது நன்றாய் யோசித்துப்பார்க்கும் பக்ஷத்தில், விவசாயம் முதன்மையான தொழிலென்றும், வர்த்தகம் இதற்கடுத்ததென்றும் உத்தியோகத்தொழில் கடைசிதரமென்றும் அறிவார்கள். ஆனால் இக்காலத்தில் தலைகீழ்பாடமாய் இருக்கிறது. உத்தியோகம் (சேவகாவிருத்தி) முதன்மை என்றும் அடுத்தது வர்த்தகமென்றும் கடைசி பக்ஷம் விவசாயமாகவும் எண்ணுகிறார்கள். இப்படி நினைக்கும் வகுப்பினர் பகுத்தறியும் சக்தியில்லாதவர்களே யென்று திண்ணமாய் சொல்லலாம்.

எப்படியெனில் எப்பொழுது ஒருவனிடத்தில் சம்பளம் வாங்குகிறானோ சம்பளம் கொடுக்கும்பேர்வழிக்கு பவ்யப்பட்டவனாய் விடுகிறான். தனது சுகத்தையும் சௌகரியத்தையும் ஒரு மூட்டையாகக்கட்டி கண்ணிற்கெட்டாத தூரத்தில் வைத்து விடவேண்டும். எஜமானிட சுகசௌகரியங்களுக்கு ஒரு அணுவளவுகூட குறைவு வரக்கூடாது. எந்த வேலையும் எஜமான் முகம் கோணாமல் வேலை செய்யவேண்டும். கௌரவக்குறைவான வேலைகளையும் செய்ய வேண்டிவரும். செய்யத்தான் வேண்டும். செய்தால் தான் சம்பளம் வந்துக்கொண்டேயிருக்கும், ஜீவனமும் நடந்துக் கொண்டிருக்கும். எஜமானுக்கு அதிருப்தி உண்டானால் ஜீவனத்தின் வாயில் மண் விழுந்துவிடும். நியாயமோ அநியாயமோ கௌரவமோ அகௌரவமோ கஷ்டமோ சுகமோ எஜமான் மனசுப்படித்தான் நடக்க வேண்டும். ஒரு உத்தியோகஸ்தனுக்குத் தன் சரீரம் தனக்குச்சுவாதீனமில்லை. எஜமான் ஆதீனம். பராதீனம் பிராணசங்கடம். உத்தியோகஸ்தர் சில சமயங்களில் அதிக சங்கடமடைகிறார்கள். சர்கார் உத்தியோகமானாலும்சரி மற்றைய எந்த உத்தியோகமானாலும்சரி அதமமே யென்று அவர்களுக்கும் புலப்படுகிறது. அதமம் சேவகாவிருத்தி. உத்தியோகத்தொழில் அதமதொழிலாம். ஒருவர் வேலையை செய்து அதனால்வரும் வருமானத்தைக்கொண்டு ஜீவித்தல் அதம ஜீவனமே. மேலும் சுயேச்சையாய் தன் காரியங்களைப் பார்க்க இயலாது. எஜமான் அனுமதியில்லாமல் அங்கு இங்கு நகரக்கூடாது. தலைபோகிற வேலையானாலும்சரி எஜமான் உத்திரவின்றி போகக்கூடாது. அதிலும் சர்கார் உத்தியோகம் பின்னும் கேடு. இது தாழ்ந்த உத்தியோகஸ்தனுக்கும் உயர்ந்த உத்தியோகஸ்தனுக்கும் ஒன்றே.



வர்த்தகன் ஒருவனுக்குக்கைகட்டி உத்திரவு சொல்லவேண்டியதில்லை. ஆயினும் அவன் தொழிலுக்கு விவசாயியின் அனுகூலம் வேண்டும். விவசாயம் செய்யும் உழவனோ ஒருவனுக்கும் கீழ்படிந்து நடக்க வேண்டிய அவசியமில்லை. தனக்குத்தானே எஜமான். சர்கார் பணத்தை அந்தர்தகிஸ்தியில் கட்டிவிட்டால் இவன் எங்கேயிருக்கிறானென்று தேடுவாரில்லை.

உத்தியோகஸ்தருக்கும் வர்த்தகருக்கும் மோக்ஷ சாதனமாகிய நல்ல காரியங்களைச்செய்வதற்கு அவகாசமில்லை. இவர் மனது, வேலையில்லாமலிருக்கும்போதுகூட ஏதோ விஷயங்களை நாடி அலை பாய்ந்துக்கொண்டிருக்கும். சேவகத்தொழிலாகிய உத்தியோகஸ்தனுக்கு உபத்திரவம் அதிகம், வியாபாரிக்கு கவலையதிகம். மேலும் வியாபாரம் துரோக சிந்தனையைத்தரும். விவசாயம் இத்தகையதல்ல. இதராளுக்கு உபத்திரவமில்லாமல் மோக்ஷசாதனமாகிய செயல்களை செய்துக்கொண்டே பூமியில் வாழும்வரையில் சுகஜீவனம் செய்வது இவர்களுக்கு இயலாது. விவசாயத் தொழிலை மேல்கொண்ட உழவருக்கு இது சாத்தியம். ஆகையால் மேல் சொன்ன மூன்றுதொழில்களில் விவசாயமே சிறந்தது. "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந் தொழுதுண்டு பின் செல்பவர்" என்னும் திருக்குறளால் உழவன் பெருமை விசிதமாய் விளங்கும். எல்லாவற்றிற்கும் மூலாதாரமாகிய விவசாயத் தொழிலைக் கைப்பற்றிய உழவரை சர்கார் உத்தியோகஸ்தருள் அனேகர் மிக்க கேவலமாய் எண்ணுகிறார்கள். இகழ்ச்சியாயும் பேசுகிறார்கள். இந்த வகுப்பு உத்தியோகஸ்தர் தாங்கள் சௌக்கியமாய் எல்லாவித சுகத்தோடும் வாழுவது கேவலமாய் எண்ணப்படும் உழவர் பொருளாலன்றோ. வெய்யிலிலும் கானலிலும் மழையிலும் காற்றிலும் இராவிலும் பகலிலும் தேகத்தில் வேர்வை ஆறாய்ப் பெருகியோட கஷ்டப்பட்டு உண்டாக்கின விவசாய தான்யங்களையும் மற்றபொருள்களையும் தின்று கொழுத்து இப்பொருள்களுக்குக் காரணமாகிய உழவரைக்கேவலமாய் பாவிப்பவர் மதியீனரும் நன்றிகெட்டவரும் ஆவார். "தினையளவு நன்றி செயினும் பனையளவாய்க் கொள்வர் பயன்றெரிவார்" என்றார் திருவள்ளுவ நாயனார். அதாவது எல்லாத்தானியங்களிலும் மிக்க சிறிதாகிய தினையரிசியவ்வளவு நன்மை செய்யினும், அதாவது சொல்ப சகாயம் செய்தாலும், பயனறிந்த பெரியோர் அதை பனங்காய் அளவாய் அதாவது மிக்க அதி

லமாய் நினைத்து நன்றி பாராட்டுவார். தாங்கள் அனுபவிக்கும் எல்லாச்சுகத்திற்கும் காரணமாகி நிற்கும் வஸ்துக்களை நெற்றியில் நீர் பெருக வேலைசெய்து கொடுத்து பேருதவி செய்யும் உழவருக்கு நாம் எவ்வளவு நன்றியுள்ளவராயிருக்கவேண்டும். பரமானந்த சுகத்தைத்தரும்பாலை பூனைவாய்ப்படாமல் எப்படி பாதுகாக்கின்றோமோ அதற்கதிகமாய் பாலைத்தரும் பசுவை பாதுகாக்க வேண்டியதில்லையா. இதுபோலவே புசிப்புக்கு அரிசிமுதலிய வஸ்துக்களை பயிராக்கிக் கொடுக்கும் உழவரைபாதுகாத்தல் வேண்டும். பாதுகாக்கின் புத்திமான்களும் நன்றியறிவாளருமாவோம்., மேன்மேலும் அவர்களால் பயனையும் அடைவோம்.

## அமெரிக்காவில் விவசாயப்படிப்பு.

அமெரிக்கா தேசத்தில் விவசாய விஷயமாய் சர்க்காரார் செய்துவரும் பல ஏற்பாடுகளை இந்தியர் அறிய வேண்டியது அவசியம். அமெரிக்கா கவர்ன்மெண்டார் குடிகள் சாதாரணமாய் அடையும் மாசூலைவிட விசேஷ மாசூலையடையும் பொருட்டும் மாசூல்தரமானதாய் விளையும் பொருட்டும் எல்லாவித ஏற்பாடுகளும் செய்து வருகிறார்கள். முக்கியமாய் எந்தபாகத்தில் விளைவு சொல்பமாயும் விசேஷ மாசூல் கொடுக்கும்படியான ஏற்பாடு செய்துக்கொள்ள குடிகளுக்கு அசாத்தியமோ அந்த பாகத்தைச் சீர்திருத்தலின் பொருட்டு விவசாய சாஸ்திரங்களில் கைதேர்ந்தவரைக் கொண்டு சகல ஏற்பாடுகளும் செய்கிறார்கள். முழுவதும் விவசாயத்தையே நம்பின குடிகளுக்கு இது எவ்வளவு நன்மை. பயிருக்கு எமனாய் ஜனித்து பயிரை நாசப்படுத்தும் பூச்சிகளையும் நோய்களையும் நன்றாய் ஆராய்ந்து இவைகளினின்றும் பயிரைக் காப்பாற்றும் உபாயம் கண்டுபிடித்து அநுபோகத்திற் கொண்டு வந்து இருக்கிறார்கள். விவசாயம் மேன்மேலும் விர்த்தியாவதற்கு வேண்டிய சகல விதமான ஏற்பாடுகளைச்செய்ய அமெரிக்கா கவர்ன்மெண்டார் பின்னடையவில்லை.

அமெரிக்கா கவர்ன்மெண்டார் விவசாய சாஸ்திரங்களை ஆராய்ந்து தேர்ந்த நிபுணர்களைக் கொண்டு விவசாயம் சீர்திருந்தும்படியான வித்தையையெல்லாம் குடிகளுக்குக் கற்பித்து வருகிறார்கள். 63 விவசாய வித்யாசாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. எந்தந்த விடத்தில் விவசாய வித்யாசாலையிருக்கின்றனவோ அந்தந்த விட-



த்துக்குடிகளுக்குச் செலவில்லாமல் விவசாயப் பயிற்சியையடைவிக்கிறார்கள். இவ்விவசாய கலாசாலைகளில் 1903 வருஷத்தில் படித்தவர் 52,489 பேராம். விவசாய வித்தையைக் கற்பிக்கும் பொருட்டும் விவசாய சம்பந்தமான விஷயங்களை ஆராயும் பொருட்டும் நியமிக்கப்பட்ட வித்வான்கள் 4359 பேராம். விவசாய கலாசாலைகளை சம்ரக்ஷணை செய்யும் பொருட்டும், விவசாயம் கற்பிக்கும் உபாத்தியாயர்களையும், வேண்டிய கருவிகளையும் அதிகரிக்கும் பொருட்டும், இந்த 1903 வருஷத்தில் நியமிக்கப்பட்ட பணம் 1,250000 டாலராம். இதல்லாமல் மாகாணங்களில் விவசாய பாடசாலைகள் (ஹைஸ்கூல்கள்) ஸ்தாபிக்கப்போகிறார்களாம். இப்போது அமெரிக்காவில் இருக்கும் பாடசாலைகளிலும் (ஹைஸ்கூல்களிலும்) பால பாடசாலைகளிலும் விவசாயஞானமடையும்படியான பாடங்களை ஏற்படுத்துவது உசிதமென்று இப்பாடசாலைகளின் தலைவர் உத்தேசிக்கிறார்கள்.

விவசாயஞானமும் படிப்பும் பரவச்செய்யும் அங்கங்களில் கிருஷிகர் பாடசாலையென்பது ஒன்று. இப்பாடசாலைகள் குடிகளிருக்கப்பட்ட ஊர்களிலேயே ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. இவைகளின் முக்கிய கருத்து என்னவென்றால் விவசாய சாஸ்திரத் தேர்ச்சியும் போதிக்கும் திராணியுமுள்ளவரைக் கொண்டு குடிகள்வசிக்கும் ஸ்தானத்திலேயே பாடம்சொல்லிப்படிப்பித்து விவசாயவிர்த்தியை யடைவிக்கவேண்டுமென்பதே. சீர்திருந்திய விவசாயத்தைப்பற்றி பயிரிடுவோருக்கு தீர்ப்பாய் அறிவித்தலும் விவசாய விர்த்தியை அநுபோகத்தில் அடைய வேண்டியதற்கு மூலதாது பலானவை என்று அறிந்துக் கொள்ளும்படியான ஞானம் உண்டாக்குவித்தலும் மிக்க முக்கியமானவை யென்று அமெரிக்கா கவர்ன்மெண்டார் உறுதியாய் நம்பி விவசாயப்படிப்பை விர்த்தி செய்து வருகின்றனர். பூமியில் உண்டாகும் மாசூலையே சகலத்திற்கும் நம்பி இருக்கும் ஜனங்களுக்கு விவசாயப் படிப்பைத் தருவதின் விவேகமும் முன்னுணர்ச்சியும் சிலாகிக்கத்தக்கதென்பதை எல்லோரும் ஒத்துக்கொள்ளுவார்கள். ஆனால் அமெரிக்காவில் விவசாய விஷயமாய்ச் செய்யப்படும் ஏற்பாடுகளுக்காக பணச்செலவு மிக்க அதிகமென்றும் அவ்வளவு பணம் செலவழிப்பது அதிக செல்வமமைந்திராத தேசத்தாருக்கு அசாத்திய மென்றும் சிலர் ஆக்ஷேபிப்பார்கள். அமெரிக்கா கவர்ன்மெண்டார் விவசாய விஷ-

யமாய்ச் செய்த ஏற்பாடுகள் மிக்க ஆச்சரியமான பயனைக் கொடுத்திருக்கின்றன. 1851-வது வருஷத்தில் விளைந்த விளைவிற்கு 1903-வதுவருஷத்தில் விளைந்த விளைவு ஆறுபங்கு அதிகமாய் விளைந்திருக்கிறது. விவசாய வஸ்துக்கள் அளவுகடந்து விளைந்து பிரமாண்டமான ஏற்றுமதி வர்த்தகம் நடக்கிறது. இவ்வளவு விவசாயச் செல்வம் பெருகியதற்கு என்ன காரணம் என்று அமெரிக்கா தேசத்தாரைக் கேட்கின் கவர்ன்மெண்டார் குடிகள் வறுமையின்றி வாழ வேண்டுமென்ற எண்ணத்தினால் குடிகளுக்குச்செய்த சகாயத்தாலும் கவர்ன்மெண்டார் விவசாய சீர்திருத்தத்திற்காக நியமிக்கும் மேதாவிகள் ஒன்றாய் ஒத்து உழைப்பதினாலுமே எந்த தேசத்தாரும் இதுவரையிலும் அடைந்திராத விவசாயப் பெருக்கத்தை அமெரிக்கர் அடைந்ததாய்ச் சொல்லுகிறார்கள்.

அமெரிக்கா தேசத்தைவிட நம்மிட இந்தியா தேசம் பூச்சாரமற்றதுமல்ல நீர்வளமில்லாதது மல்ல ஏழ்மையான ராஜாங்கையுடையதுமல்ல. அமெரிக்கரைவிட இங்கிலீஷ்காரர் ஒருவிதத்திலும் தாழ்ந்தவரல்ல. இவ்வுலகத்திலுள்ள ராஜாக்களுள் முதன்மையாவர். நம்மிட ராஜாங்கத்தாரும் விவசாய டைரக்டர் ஒருவரை ஏற்படுத்தி விவசாய விர்த்தி விசாரணை செய்து பல நன்மை செய்து வருகிறார்கள். பரிதாப நிலையிலிருக்கிற இந்திய விவசாயத்தை இன்னும் தீர விசாரணை செய்து அமெரிக்கா கவர்ன்மெண்டாரைப்போல விவசாயப் பெருக்கத்திற்கான ஏற்பாடுகள் பரவலாய்ச் செய்வதுடன் விவசாயிகளுக்கும் விவசாயப் படிப்பைத் தருவார்களே யாகில் கோடாகோடியாயுள்ள இந்தியாவின் விவசாயிகள் ஜீவித்து நன்றி யறிதலுடையாராவதுடன் ராஜாங்கத்தாருக்கு வலதுகை போன்று பலத்தைத் தருவாராவர். நம்மிட கவர்ன்மெண்டாரும்இந்தியாவின் பெரிதாபமான விவசாயநிலைமையை அறிந்து அது விஷயமாய் பல ஏற்பாடுகள் செய்ய எண்ணியிருக்கிறார்களாம்.

## நீரார்தார வேலைகள்.

இந்தியாவில் கொடிய பஞ்சம் அடிக்கடி வந்து ஜனங்கள் வருந்துவதைக்கண்டு இந்தியா கவர்ன் மெண்டார் பஞ்ச விசாரணை கமிஷன் என்று ஒன்றை நியமித்து பஞ்சம் சதா இந்தியாவைப் பீடிப்பதற்குக் காரணம் பஞ்சம் மறுபடி வந்து பீடியாமலிருப்பதற்காகச் செய்யவேண்டிய உபாயம் இவை இரண்டையும் நிர்விசாரணைசெய்து தெரிவிக்கும்படி உத்திரவளித்தார். முக்கியமாய் காலத்தில் மழையில்லாமையாலும், பயிர் செய்யவேண்டியதற்கு சாதனமானவைகளை சேகரிக்கவும் கிணறு கால்வாய்களை முதலிய ஜலாதாரமுண்டாக்கி நீர் பாய்ச்சவும் சக்தியற்றவர்களாய் விட்டமையாலும் இக்கொடிய பஞ்சங்கள் அடிக்கடி பீடிப்பதாய் ஏற்பட்டது. இந்த கஷ்டத்தினின்றும் ஜனங்களைக் காப்பாற்று முபாயம் நீர்ப்பாய்ச்சலின் ஒவ்வொரு தக்கவழியையும் யுக்தி மதியோடு பூரணப்பிரப்பாய் உபயோகித்தலே யென்று தேர்ந்து தெளிந்து இந்தியாகவர்ன்மெண்டுக்கு அனுப்பிய ரிபோர்ட்டில் தெரிவித்தார்கள். இந்தியா கவர்ன்மெண்டார் நீர்ப்பாய்ச்சல் கமிஷன் ஒன்றை நியமித்து இந்தியாவின் நீர்ப்பாய்ச்சுதற்கான சாதனங்களைச் செம்மையாய் விசாரணை செய்து ரிபோர்டு செய்யும்படி அனுப்பினர். இந்த கமிஷன் இந்தியாவின் ஒவ்வொரு இடத்திற்குப்போய் விசாரணை செய்து அங்கங்குள்ள மேதாவிகளின் அபிப்பிராயத்தையறிந்து இந்தியா கவர்ன்மெண்டாருக்கு ரிபோர்டுசெய்தார்கள். இந்த ரிபோர்ட்டை அனுசரித்து நமது ராஜப்பிரதிநிதியானவர் அந்தந்த மாகாணத்துகவர்னருக்குநீர்ப்பாய்ச்சு முபாயங்களை ஆலோசித்துத் தெரிந்தெடுத்து ஜலாதாரம் பூர்த்தியாய் உண்டாகும்படி என்ன வேலை எடுத்துக்கொள்ளலாம் என்பதை அறிவிக்கும்படியாய் ஆக்யாபித்தார். இதன்பேரில் நமது கவர்னர், மேதாவிகளான இஞ்சினீர்களைப் பொருக்கி எடுத்து மிக்க சாதனமாகிய ஜலாதாரம் உண்டு பண்ணும்படியான வேலை யுபாயங்களை ஆராய்ந்தெடுத்து அப்படி ஆராய்ந்தெடுக்கப்பட்ட வேலைகளைப் பற்றி விரிவான ரிபோர்ட்டு செய்யும்படி ஆக்யாபித்தார். இந்த இஞ்சினீர்கள் அதற்குத்தகுந்த ஏற்பாடுகள் செய்து அந்தந்த ஜில்லாக்களில் உதவக்கூடிய வழிகளுக்குரிய நீராதாரவுபாய வேலைகளைத் தெரிந்தெடுத்து வருகிறார்கள். இதுவரையில் 21 ஜலாதார உபாயவேலைகளைத் தெரிந்தெடுத்திருக்கிறார்கள். இவ்விருபத்தொன்று நீராதாரவுபாய வேலைகளும் நான்குஜில்லாக்களின் வேலைகளாம். இன்னும் இஜ்ஜில்லாக்களிலேயே ஆறுநீர் ஆதாரவுபாய வேலைகள் சோதிக்கப்பட வேண்டியிருக்கின்றனவாம்.

நீராதார வுபாயங்களைத் தெரிந்தெடுப்பதற் கென்று நியமிக்கப்பட்ட இஞ்சினீர்கள் ஒவ்வொருஜில்லாவின் ரிவினியூஅதிகாரிகளோடும் ரிவினியூ போர்டாரோடும் கலந்து அந்தந்த ஜில்லாக்களின்

யோக்கியதைப்படி ஜலாதார வேலைகளை நியமிப்பார்கள். ஜலாதார விஷயமாய் முக்கிய விசாரணைசெய்ய வேண்டிய ஜில்லாக்கள், கஞ்சம், விசாகப்பட்டணம், கடப்பை, அனந்தபூர், சித்தூர், சேலம், கோயம்பத்தூர், செங்கல்பட்டு, மதுரை, திருநெல்வேலி. இந்த ஜில்லாக்களின் ஜலாதார விசாரணையை எடுத்துக்கொள்ள நமது ராஜப்பிரதிநிதியாகிய கவர்னர் ஜனரலினுடைய உத்திரவை எதிர்பார்க்கிறார்கள். இந்தியா கவர்ன்மெண்டார் உத்திரவான உடனே இந்த கமிஷனர்கள் புறப்படுவார்கள். ஒவ்வொரு ஜில்லாவிலும் ஜலாதாரமுண்டாகும்படியான வழியைக் கண்டு பிடித்து மதராஸ் கவர்ன்மெண்டாருக்கு ரிபோர்ட்டு செய்வார்கள்.

நமது ஆங்கிலேய ராஜாக்கள் இந்தியாவி லடங்கிய ஜனங்களெல்லாம் கொடிய பஞ்சத்தினின்றும் நீங்கலாய், சௌக்கியமடையும் பொருட்டு இந்தியா முழுமையிலும் ஜலாதாரவழிகளென்னென்ன உண்டோ அவ்வளவையும் செய்து இந்தியர்களை வறுமையினின்று நீக்கவேண்டுமென்ற கருத்து கொண்டவர்களாயிருக்கிறார்கள். ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு தாலுக்காவிலும் ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள குறைகளை கவர்மெண்டாருக்கு எடுத்துக்காட்டி இக்குறைகளை நீக்குவதற்குத் தக்க உபாயமெதாவதிருந்தால் அதையும் தெரிவித்துக்கொண்டே வந்தால் ஜீவகாருண்யம் நிறைந்த நமது ராஜாங்கத்தார் ஜனங்களின் குறைகளை நீக்காமல் போகார். பிள்ளை அழாமல் மந்தமாயிருந்தால் அதன்பசி தாய்க்கு எப்படி தெரியும். நாம் நமது குறைகளை விசிதமாய் எடுத்துரையாவிட்டால் கவர்ன்மெண்டாருக்கு எப்படி தெரியும். கவர்ன்மெண்டார் தாய்க்குச் சமானம். லக்ஷக்கணக்கான இந்திய பிரஜைகளின் குறைகளை விசாரித்து வேண்டியதை செய்வது அசாத்தியம். ஆகையால் ஒவ்வொரு இந்தியனும் பயப்படாமலும் ராஜவிசுவாசத்திற்குக் குறைவில்லாமலும் தங்களிட குறைகளை எடுத்துக்காட்டிக் கொண்டிருந்தால் தான் நன்மையுண்டாகும்.

## விவசாயச் சங்கங்கள்.

மத்திய மாகாண* ஜனங்கள் 1899 - 1900 ம் வருஷத்தில சம்பவித்த கொடிய பஞ்சத்தால் சொல்லமுடியாத கஷ்டத்தையடைந்து வருந்துவதைக்கண்டு, அக்காலம் மத்தியமாகாணங்களின் முக்கிய கமிஷனராகிய சர் ஆன்ரு பிரேசர் என்பவரும் கனதனவான்களும்



ஒருமைப்பட்டு விவசாயச் சங்கமொன்று ஏற்படுத்தினார்கள். இதற்கு மத்திய மாகாண விவசாயச் சங்கமென்று பேர். இது மத்திய மாகாணங்களின் தலைமை நகராகிய நாகப்பூரில் ஸ்தாபிக்கப்பட்டது. இச்சங்கத்தை உண்டு பண்ணியதற்கு முக்கிய காரணம் என்னவென்றால் கவர்ன்மெண்டு விவசாய இலாகாதாருக்கும் விவசாயிகளுக்கும் கூட்டுறவு உண்டாக்கி விவசாய விர்த்தியையுண்டாக்க வேண்டுமென்பதாம். விவசாய அனுபோகமுள்ள தலைமையான விவசாயிகளும் கைத்தொழில் அனுபோகமுள்ளவரும் முக்கியமான விவசாய திரவியங்கள் பெருக வேண்டுமென்றபேராவலுள்ள ஐரோப்பியர்களும் இச்சங்கத்தின் மெம்பர்களாம். இவர்கள் கவர்ன்மெண்டு விவசாய இலாகாதாரோடு கலந்து விவசாய விஷயமாய் கவர்ன்மெண்டார் செய்துவரும் சகலயேற்பாடுகளுக்கும் தங்களால் கூடியமட்டும் உதவி செய்யுவதாய் வாக்களித்திருக்கிறார்கள். நாளுக்குநாள் சீர்திருத்தமடைந்து இப்போது மத்தியமாகாணச் சங்கம் செம்மையாய் நடந்து வருகிறது. தற்காலத்தில் ஒவ்வொரு ஜில்லாவிலும் விவசாயச்சங்கமும் கைத்தொழில் சங்கமும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. விவசாய கைத்தொழில் சீர்திருத்த விஷயமாய் தங்களாலான உதவி யெல்லாம் செய்புவதாயும் பரிக்ஷார்த்தமாய்த் தங்களிடத்தில் கொடுக்கப்படுகிற விவசாய பரிக்ஷை வேலைகளைத் தங்கள் தங்கள் கிராமங்களில் செய்யுவதாயும் இச்சங்கங்களின் மெம்பர்கள் கவர்ன்மெண்டாருக்கு வாக்குக்கொடுத்திருக்கிறார்கள். இச்சபைகள் கூடி, விவசாயச் சீர்திருத்தலுக்கான வேலைகளைச்செய்வதற்குச்சாத்தியமான உபாயத்தை ஆலோசித்தேற்படுத்திக்கொண்டு ஒவ்வொரு மெம்பருக்கும் வேலை பகுந்து கொடுக்கப்படுகிறது. இம்மெம்பர்கள் தங்கள் தங்கள் வேலையைச்செய்து ரிபோர்ட்டு செய்கிறார்கள். இச்சங்கங்கள் அதிக உபயோகமான வேலைகளைச் செய்திருக்கின்றனவாம். மத்திய மகாணங்களின் முக்கிய கமிஷனர் இச்சங்கங்கள் கவர்ன்மெண்டு விவசாய இலாகாவுக்கும் விவசாயிகளுக்கும் மத்தியில் நின்று வெகு முக்கியமான வேலைகள் செய்ததாய்ச் சொல்லுகிறார். கவர்ன்மெண்டாரால் சேகரிக்கப்பட்டசேர்ந்த விதைகளை குடிகளுக்குப் பகுந்து கொடுக்கவும், விவசாய ஞானத்தையும் விவசாய சம்மந்தமான சகல விஷயங்களிலும் அவாவையும் குடிகளுக்கு உண்டாக்கவும் இச்சங்கங்கள் முக்கிய கருவியாயிருக்கின்றனவாம்.

தற்காலம் வங்காள மகாணத்தின் முக்கிய கமிஷனர் மத்திய மாகாண விவசாயச்சங்கத்தை முதன் முதல் ஸ்தாபித்தார். இவரு பிரேசர் என்பவர். தான் மத்திய மாகாணங்களில் ஸ்தாபித்த விவசாயச்சங்கம் நன்றாய் நடந்து வரும்போது வங்காள மாகாணத்திலும் ஏன் நடக்காது என்று எண்ணி வங்காள மாகாண விவசாயச்சங்கமென்று ஒன்று இப்போது தான் ஸ்தாபித்தார். இவர் மத்திய மாகாண விவசாயச்சங்கத்தை முன்னுக்குக்கொண்டு வந்ததைப்போலவே இதையும் முன்னுக்குக்கொண்டு வருவார் என்பதற்கு ஐயமில்லை.

சென்னை மாகாணத்தில் மாகாணச் சங்கமின்னம் ஏற்படவில்லை. கிளைச்சங்கங்கள் சில ஜில்லாக்களில் ஏற்பட்டிருக்கின்றன. தலைச்சங்கமொன்று ஏற்படும் பக்ஷத்தில் ஜில்லாக்கள் தோறும் கிளைச்சங்கங்கள் தானாய் ஏற்பட்டுவிடும். இப்பொழுது செங்கல்பட்டு வடஆற்காடு தஞ்சாவூர் ஜில்லாக்களில் விவசாயச்சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

பம்பாய் மகாணத்திலும் இன்னம் மற்றுமுள்ள மாகாணங்களிலும் விவசாயச்சங்கங்கள் இன்னமும் ஏற்படவில்லை. இம்மாகாணங்களின் சுதேசாபிமானிகள் கூடிய சீக்கிரத்திலேயே தகுந்த ஏற்பாடு செய்வார்களென்று நம்புகிறோம்.

இந்தியா முழுமையும் விவசாயச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்படவேண்டும். விவசாயமே இந்தியர்களுக்கு முக்கியதொழில். விவசாயமே இந்தியாவில் சீர் திருந்தவேணும். மற்றதேசங்களில் விவசாயமும் கைத்தொழில்களும் நாளுக்கு நாள் அபிவிர்த்தியாய்க் கொண்டுவர இந்தியாவில் மட்டில் நாளுக்கு நாள் க்ஷீணதசையை யடைந்து வருகின்றன. எத்தொழிலுக்கும் மூலதாதுவாகிய விவசாயத்தைச்சரியாய்க்கவனிப்பாரில்லை. இந்தியாவின் விவசாய நிலைமையை ஆராய்ந்து தக்க சீர்திருத்தலுக்கான உபாயங்களைத் தேடவேண்டும். ராஜாங்கத்தார்பேரில் மட்டும் சொல்லக்கூடாது. கவர்ன்மெண்டார் விவசாய விசாரணைக்கென்றே ஒரு டிபார்டுமெண்டு ஏற்படுத்தி இருக்கிறார்கள்; கவர்ன்மெண்டாரால் எந்த எந்த காலத்தில் எவ்வளவு செய்யக்கூடுமோ அவ்வவ்வளவு சீர்திருத்தங்களை செய்து வருகிறார்கள். ஆயினும் விசாலமான இவ்விந்தியாவின் ஒவ்வொரு ஊரிலும் விவசாயச்சம்பந்தமான விஷயங்களில் மேதாவிகளையனுப்பி விவசாய சீர்திருத்தம் செய்வது இக்காலம் கவர்ன்மெண்டா



ருக்கு அசாத்தியம். ஆகையால் விவசாயம் சம்பந்தமான குறைகளையும் அக்குறைகளை நீக்கக்கூடிய உபாயத்தையும் நன்றாய் ஆராய்ந்தறிந்து கவர்ன்மெண்டாருக்கு தெரியப்படுத்தும்படி ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு தாலூக்காவிலும் ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு சங்கம் ஸ்தாபிக்கப்பட வேண்டும். கிராமங்களிலுள்ள கனதனவான்கள் ஒன்றுகூடி கிராம விவசாயச்சங்கமொன்று ஏற்படுத்தவேண்டும். விவசாய விசாரங்களைச் செய்துக்கொண்டேயிருக்கவேணும். இதில் விவசாயத்தில் பூர்த்தியான அனுபோகமுடையவர் மெம்பர்களாயிருக்கவேண்டும். ஒரு தாலூக்காவிற்குள் அடங்கிய கிராமங்களின் கிராம விவசாயச்சங்கங்கள் தாலூக்கா விவசாயச் சங்கத்திற்கு அடங்கியதாய் விவசாய சம்பந்தமான எல்லா விஷயங்களையும் ரிபோர்டு மூலமாய் அறிவிக்கவேண்டும். தாலூக்கா விவசாயச்சங்கங்கள் எல்லாம் ஜில்லா விவசாயச்சங்கத்திற்கு அடங்கியதாய் அவைகளின் நடவடிக்கைகளை ஜில்லாச்சங்கத்திற்கு தெரிவிக்கவேண்டும். ஜில்லாச்சங்கங்கள் மாகாண விவசாயச்சங்கத்திற்கு அடங்கி சகல விவசாய விஷயங்களையும் விவசாயிகளின் க்ஷேமலோபங்களைப்பற்றிய விஷயங்களையும் மாகாணச்சங்கத்திற்கு ரிபோர்டு செய்யவேண்டியது. இப்படியே ஒவ்வொரு மாகாணத்திலும் ஏற்பட்டு எல்லா மாகாணச்சங்கங்களும் இந்தியா விவசாயச்சங்கத்திற்கு கீழ்ப்படிந்து நடத்தும் நடவடிக்கைகளையெல்லாம் இந்தியா விவசாயச்சங்கத்திற்கு ரிபோர்டு செய்யவேண்டியது. இந்தப்படி விவசாயச்சங்கங்கள் ஏற்பட்டு விவசாய விஷயமான சகலத்தையும் பரிசோதித்து கவர்மெண்டாருக்கு எடுத்துக்காட்டிக்கொண்டே வந்தால், குடிகள் க்ஷேமமாய் வாழ்ந்தால் தான் ராஜாங்கம் க்ஷேமமாய் வாழுமாகையால், ராஜாங்கத்தார் விவசாயிகளின் க்ஷேமத்தைத் தேடுவார்களென்பதற்குச் சந்தேகமேயில்லை.

இவ்விவசாயச் சங்கங்கள் செய்யத்தக்க முக்கிய பயனைத் தரும் வேலை யொன்றுண்டு. அதாவது, ஒவ்வொரு கிராமச்சங்கமும் விவசாயத்தில் சரியான அனுபோகமுடையவரும் புத்திமதியுள்ளவருமான வரைக்கொண்டு பாலர்களுக்கு விவசாயப் படிப்பைக் கற்பிக்கும்படிச் செய்யலாம். அன்னிய தேசங்களில் விவசாயம் பெருகி அச்சரியத்தைத்தரும்படியான பயனைக்கொடுக்க இந்தியாவில் மட்டில் விவசாயம் குறைந்து பலன் அற்பமாய் இருக்கிற காரணங்களையும் என்ன என்ன செய்தால் விவசாயம் விர்த்தியடையும்

என்னும் விஷயங்களையும் பலதேசத்து வர்த்தமானங்களை அறிவித்து விவசாய சாதனமான பல நன்மைகளைச் செய்யலாம். வீணில் ஆடித்திரிகிற பிள்ளைகளுக்கு விவசாய சாஸ்திர பழக்கமும் அநுபோகமும் உண்டுபண்ணலாம். "விளையும் பயிர் முளையிலே" யென்றபடி சிறு பிராயத்திலே பிள்ளைகளுக்கு விவசாய அநுபோகத்தை அநுசரித்த விஷயங்களை யெல்லாம் போதித்து திருஷ்டாந்தமாய் அநுபோகத்திலுங்காட்டி விவசாயவிஷயத்தில் தேர்ச்சியடைவிக்கலாம். மீன் குட்டிக்கு நீச்சல் கற்றுக்கொடுக்கவேண்டுமா? பயிரிடும் குடியானவன் வயிற்றில்பிறந்து அவனுடன் நடமாடிவருகிற பிள்ளைகளுக்கு விவசாயப்படிப்பென்று ஒன்றுகற்றுக்கொடுக்கவும் வேண்டுமா? அதாவே வந்துவிடுமே என்று அபிப்பிராயப்படுவார் சிலர். இது தப்பு அபிப்பிராயம். சகல விஷயமேதாவியாய் சகல சாஸ்திர பண்டிதனாய் சகல பாஷா வல்லவனாயிருக்கும் ஒருவன் புத்திரனை, படிப்பிக்காமலே வைத்து வைத்தால் சகல விஷய ஞானியாகிய தகப்பனுடன் கலந்து நடமாடி வருவதால் இப்பிள்ளைக்கு தகப்பன் யோக்கியதை வருமா? ஒருக்காலும் வராது. இது எல்லோரும் ஒத்துக்கொள்ளவேண்டிய விஷயமே. மீன் குட்டிக்கு நீச்சல் கற்றுக்கொடுக்கவேண்டியதில்லை தான். ஆனால் குளத்தில் நீந்தி-உலாவி வரும் மீனுக்கு சமுத்திரத்தில் தனக்கு அபாயமின்றி உலாவிவர சாமர்த்தியம் போதாது. ஏனெனில் குளத்தில் சத்துரு இல்லை. சமுத்திரத்தில் சொறா, திமிங்கிலம், முதலான சத்துரு அதிகம். ஆகையால் இப்போது மிகக் கேட்டையடைந்து அதிக சொல்ப மகசூலைத் தரும் விவசாயத்தை காலதேசவர்த்தமானமறிந்து விர்த்திசெய்யாமல் நான் செய்கிறபடி என் பிள்ளை செய்யப்பட்டும் என்று சொல்வது மதியீனம். விவசாயிகள் விவசாயத்தால் சொல்வர்களாம் விஷயங்களைக்கற்காமல் வேறே என்ன செய்வது. கிராமத்தின் குடிகளின் க்ஷேமலோபவிசாரணை செய்து கவர்ன்மெண்டாருக்கு விண்ணப்பித்து சீர்திருத்தம் அடைய வேண்டியதையே கவனத்தில் வைத்து உழைத்து வரவேண்டும். இப்படி உழைக்கில் இந்தியர்கள் செல்வர்களாவதற்குச் சந்தேகமில்லை. இக்காலம் இகழப்படும் இந்தியர் இனி புகழப்படுவார்.



# மெல்ரோசாபுரம் பண்ணை.

செங்கல்பட்டு ஜில்லாவில் மெல்ரோசாபுரம் என்னும் ஊரில் எப். வீ. மிஷன் பாதிரியார் ஒரு பண்ணை ஸ்தாபித்திருக்கிறார்கள். இப்பண்ணையுள்ள இடமானது சுமார் 10-வருஷங்களுக்கு முந்தி சிறுமுட்செடிகளடர்ந்த உபயோகமற்ற காடாயிருந்தது. இதைச் சுற்றிலும் நஞ்செய் நிலங்களிருந்தன. ஆனதுபற்றி இவ்வுபயோகமற்ற முட்செடிகளடர்ந்த காட்டை காட்டிலாகாவில் சேர்க்கவும் இயலவில்லை. பணத்தைச்செலவு செய்து காடுவெட்டி திருத்தி செம்மைப்படுத்தினாலும் புஞ்சைப் பயிர் செய்யத்தான் பிரயோசனப்படுமென்றும் நஞ்சைப்பயிர் செய்யின் பலனைத்தராது என்றும் எண்ணத்தக்கதாயிருந்தது. சுற்றிலும் நஞ்சைப்புலங்கள் சூழ்ந்திருப்பதால் அருகாமையிலுள்ள செங்குன்றம் என்னுமூர் ஆடு மாடுகளுக்கு மேய்ச்சற்றரை யாவதற்கும் பிரயோஜனமில்லை. 1898-வருஷத்தில் இத்தகைய பிரயோசனமற்ற நிலத்தை எப். வி. எம். பாதிரியாகிய ரெவரண்டு ஏ. ஆன்ரு என்பவர் கவர்ன்மெண்டாரிடம் வாங்கி திருத்தி முதல் முதல் புஞ்சைப்பயிர் செய்ய ஆரம்பித்தார். இந்நிலம் 72 ஏகா விஸ்தீரணமுடையது. முதலில் உழுது புஞ்சைப்பயிர் செய்தபோது எருப்போடவில்லை. ஆதலின் ஏகரா ஒன்றுக்கு 15-அல்லது 20-ரூபாய் பெறும்படியான மகசூல்தான் கிடைத்தது. முதல் முதல் அவ்விடத்தில் ஒரு கிணறு வெட்டினார். பிறகு இக்கிணற்றை பெரிதாக்கி ஒருபெரிய துரவு கட்டினார். முதலில் சாதாரணமாய் சுதேசிகள் உபயோகிக்கும் கவலைகளைக் கொண்டு தான் தண்ணீர் இறைத்தார். லாபம் அதிகமாய்க் கிடைக்கவில்லையாம். இப்படியே கொஞ்சகாலமளவில் பயிர் செய்து வந்தார். 1902-ம் வருஷத்தில் மிஸ்டர் சாட்டர்டன் என்னும் இஞ்சினீர் இப்பண்ணையிலுள்ள கிணற்றுநீரை நீராவி யந்திரம் வைத்து இறைத்துப்பயிரிடச்சொன்னார். 3½-குதிரை சக்தியுள்ள யந்திரத்தையும் 3-அங்குலம் குறுக்களவுள்ள குழாயையும் உபயோகித்து நீரிறைத்து பயிர்செய்ய ஆரம்பித்தார். அவர் ஆரம்பித்த சுமார் ஒரு வருஷத்தில் இப்பண்ணையின் வருமானம் 212-ரூபாயிலிருந்து 633-ரூபாயாயிற்று.

நெல், ராகி, முதலிய தானியங்களைப்பயிர் செய்வதோடு அதிக லாபத்தைத் தரக்கூடிய மஞ்சள் கரும்பு வாழை போன்றவைகளையும் பயிர் செய்தாராம். அதிகமாகவே ஒரே வருஷத்தில் செடி

க்கூடிய சக்தியை இப்பண்ணை நிலம் பெரும்படியான காரணமென்னவெனிலே, ஆச்சரியமான காரியமொன்றுமல்ல. சாதாரணமாய் குடிகள் சம்பாதிக்கக்கூடியஎருவை ஏராளமாய்ப்போட்டு செம்மையாய் உழுது பயிர் செய்ததேயாம்.

தற்காலம் இப்பண்ணையில் கிளி கொஞ்சுகின்றன்வாம். சிறு முட்செடிகளும் நாகதாளிபுதரும் நிறைந்திருந்த உபயோகமற்ற நிலம் பார்க்கப்பார்க்க மனதைக்கவரும்படியான மனோரம்யமான சிறு பண்ணையாயிருக்கிறது. இதைப்பார்க்கும் குடியானவனுக்கு இப்படிப்பட்ட பண்ணை நமக்கில்லையேயென்ற பொறாமைசனிக்கும். தென்னை மரங்களும் பலாமரங்களும் கிச்சிலிமரங்களும் கொய்யா மரங்களும் உபயோகமான பழவர்க்கங்களைத்தரும் மற்றைச்செடி மரங்களில் பலவகைகளும் வைக்கப்பட்டு மிஸ்டர் ஆன்ரு துரையால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. புஞ்சை தானியப்பயிர்களும் நஞ்சை தானியப்பயிர்களும் செம்மையாய்ப் பயிர்செய்துசாதாரணமாய்க் குடிகளடையும் பலனைக்காட்டிலும் இரட்டிப்பு பலனையடைந்தார். இப்போது புஞ்சைப்பயிர் செய்வதில் அதிக கஷ்டம் எடுத்துக்கொள்ளாமல் ஏராளமான லாபத்தைத்தரக்கூடிய மஞ்சள் கரும்பு வாழை முதலிய பயிர் செய்வதில் அதிக கவனம் வைத்து வருகிறார்.

இவர் விவசாய விஷயத்தில் பூர்த்தியான கவனம் வைத்து சீர்திருத்தங்கள் வேண்டியனவைகளை அப்போதைக்கப்போது செய்து எந்த காலத்தில் எந்தப்பயிர் செய்தால் லாபத்தைத்தருமோ அதை விசாரித்தறிந்து உழவு, எருமுதலிய விவசாயத்திற்கு இன்றியமையாத சாதனங்களை பிழையறச்செய்து பயிரிடுவதால் இவரடைந்த லாபம் கேட்பவனுக்கு வியப்பைத்தரத் தக்கதாயிருக்கிறது. இவர் பண்ணையில் விளையும் பொருள்கள் மிக்க செழுமையும் கொழுமையுமுடையதாயிருக்கின்றனவாம். இவர் வைத்ததென்னைகள் 10-வருஷங்களுக்குள் மரம் ஒன்றுக்கு வருஷத்திற்கு ரூ 1-4-0 பலம் கொடுக்கிறது. இம்மரங்கள் செழித்துப் பருத்திருக்கின்றனவாம். ஒரு மரத்தின் சுற்றளவு 7-அடி 5-அங்குலமிருக்கிறதாம். பலாமரங்கள் செழித்தோங்கிவளர்ந்து சுமார் 15-அடி உயரமுள்ளவைகளாய் மிகுந்த மதுரமான பெருத்த பழங்களைக்கணக்கின்றி கொடுக்கின்றன. கிச்சிலி கொய்யாமரங்களும் செழுமையும் பருமையும் கொழுமையும் உடையதாகிய இனிய பழங்களைத்தருகின்றன.



அனேக விதமான வாழைமரங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளின் குலைகள் நீண்டும் பருத்துமிருக்கின்றன. இரண்டு ஏகரில் வைத்த வாழை 18-மாதத்தில் ஏறக்குறைய 500-ரூபாய் பலன் கொடுத்தது. கரும்பு பயிரிட்டார். இதில் ஏகர்ஒன்றுக்கு 400-ரூபாய் விதம் பலன் கிடைத்தது. கரும்பு விர்த்திசெய்யும் பொருட்டு சகல விதமுயர்ச்சியும் செய்ய இந்ததுரை தீர்மானித்திருக்கிறார். ஒரு துண்டு நிலத்தில் 12-விதக்கரும்புகள் விதைத்துப்பரிக்ஷித்து வருகின்றனர்.

இவ்வருஷத்தில் மெல்ரோசாபுரம் பண்ணையில் 5-ஏகரா கரும்பும் 12-ஏகரா வாழையும் 6-ஏகரா தோட்டப்பயிரு மிட்டிருக்கின்றன. பருவநிலை திருப்தியாக இருக்குமானால் 5-ஏகரா கரும்பிலிருந்து 1500-ரூபாய் வருமானமும் 12-ஏகராவாழையிலிருந்து 1450-ரூபாய் வருமானமும் 6-ஏகரா தோட்டப்பயிரிலிருந்து 350-ரூபாய் வருமானமும் ஆகமொத்தம் 3300-ரூபாய் வருமானம் கிடைக்குமென்று இப்பண்ணைக்குச் சொந்தக்காரரான மிஸ்டர் ஆன்ருதுரை சொல்லுகிறார். இதன் செலவு சுமார் 1900-ரூபாயாம். செலவுபோக 1400-ரூபாய் லாபம். இவைகள் தவிர இதரபயிர்களின் பலன் வேறே இருக்கின்றன.

உபயோகமற்ற நிலத்தைப்பண்படுத்தி இவ்வளவு லாபம் தரத்தக்க வளமுடையதாக்கியது என்ன சாதனத்தைக்கொண்டு என்றாலோ ஒன்றும் புதிதல்ல. சாதாரணமாய்க் குடிகளுக்கெட்டாத சாதனங்களைக் கொண்டல்ல. எல்லா விவசாயிகளும் எளிதில் சம்பாதிக்கத்தக்க எருக்களைக்கொண்டும் செம்மையாய் வேண்டிய அளவு ஆழமாய் உழுதும் நீர்ப்பாய்ச்சலுக்கு வேண்டிய உபாயத்தைத்தேடியும் பயிர்களை பூச்சி புழு நோய் முதலியவைகளினின்று ஜாக்கிரதையாய்க் காப்பாற்றுதலுமேயன்றி வேறல்ல. வேலைக்காரரிடத்தில் அன்புகாட்டி வேலைகளை அக்கரையாய் செய்யும்படி செய்தலும் குடிகள் சுலபமாய்ப் பெறக்கூடிய எரு, தழை, சாம்பல், தெருக்குப்பை, வண்டல் இவைகளை போதுமானவ்வளவு உபயோகித்தலும் எந்தெந்த காலத்தில் ஜலம் பாய்ச்சவேண்டுமோ அந்தந்த காலத்தில் திட்டமாய் ஜலம் பாய்ச்சுதலும் பயிருக்கு உபயோகப்பட வேண்டிய பூச்சாரங்களையும் எருச்சாரங்களையும் உரியும் களைகளைப்போக்குதலும் பூச்சிபுழுக்களால் பயிருக்குண்டாகும் கெடுதியினின்றும் பயிர்களைக்காக்கும் உபாயங்களைத் தேடுதலுமாகிய

வற்றை வளர்க்கத்தக்கதாயும் வைராக்கியத்துடனும் செய்து வந்ததாலேயே மிஸ்டர் ஆன்ரூ தரிசாக்காடாயிருந்த இடத்தை வருஷத்தில் சுமார் 2000-ரூபாய் வருமானம் தரும்படி செய்கின்றார்.

இப்பண்ணைக்கு ஜலாதாரமாக இரண்டு கிணறுகளிருக்கின்றன. சிறியது ஒன்று பெரியது ஒன்று. பெரிய கிணற்றில் பக்கங்களில் தோண்டி ஊற்றுகளை அதிகப்படுத்தியிருக்கின்றனர். கவலைகளும் கிணறுகளும் விர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன. நீராவி யந்திரத்தைக் கொண்டும் தண்ணீர் இறைத்து வருகின்றனர். நீராவியந்திர இறைப்பால் சாதாரணமாய் 2, 3 ஏக்கரா பாயக்கூடிய கிணற்றிலிருந்து 20-ஏக்கராவுக்குத் தட்டுத்தடையின்றி பாய்ச்சுகிறார்கள். இதுபோதாது என்றும் ஒரு கிணற்றினின்று 40 ஏக்கராவுக்கு ஜலம் பாய்ச்சவேண்டுமென்ற கருத்துடனும், மேன்மேலும் விர்த்திசெய்ய முயன்று வருகிறார்.

இப்பண்ணையைச்சேர்ந்து ஒரு விவசாய பாடசாலையொன்று இருக்கின்றது. இதில் பிள்ளைகளுக்கு விவசாயத்தொழில் கற்பிக்கப்படுகின்றது. விவசாயத்தொழிலுக்கு வேண்டிய ஆயுதங்கள் செய்யவும் கெட்டுப்போன ஆயுதங்களை சிர்படுத்தவும் கற்பிக்கப்படுகின்றன. பூமியில் பொருமையாய் உழைத்து காலதேசவர்த்தமான மறிந்து பயிரிட்டு பயிரைக் காப்பாற்றுவதற்கான சாதனங்களை குறைவறச்செய்துவரும் பக்ஷத்தில் சாதாரணமாய் 20 ஏக்கராவில் பெறுவதை இரண்டு ஏக்கராவில் பெறலாம். இது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் மெல்ரோசாபுரம் பண்ணையால் விளங்குகின்றது. மிஸ்டர் ஆன்ரூ துரையின் செய்கையால் குடித்தனக்காரர்கள் செய்யக்கூடியவைகளைச் சரிவரச்செய்வதாலேயே ஏக்ரா ஒன்றுக்கு வருஷத்தில் 150 ரூ அல்லது 200 ரூபாய்க் கிடைக்குமென்று தெரிவிக்கின்றனர். முன் நாகதாளியும் முட்செடிகளுமடர்ந்த நிலம் இப்போது பழத்தோட்டங்களும் தென்னைச்சோலைகளும் செழிப்புள்ள மாம்புளி வாழை முதலியவைகளும் நிறைந்து பார்ப்பவர் கண்ணைக்கவரும்படியான அழகும் மனோகரமும் பொருந்திய ஒரு திவ்ய கிராமமாயிருக்கின்றது. முன் கால் காசுகூட பெறுமதியிருந்த நிலம் இப்போது குறைந்தது 40,000 ரூபாய் பெறுமானதாக இருக்கின்றது. இவ்வள ஆச்சரியத்தைத்தரும்படியான மதிப்பு எத்தனை வருஷங்களுக்குள் உண்டானதென்றாலே எல்லாம் பத்துவருஷத்திற்குள் தான். இப்பண்ணை நடையில் எவ்வளவு விர்த்தியாகுமோ நாமே அறிந்துக்கொள்ளலாம்.



கால்காசு பெறுநிலம் ரூ 40,000 பெறுமானதானது சாதாரண குடித்தனக்காரருக்கெட்டாத சாதனங்களைக்கொண்டாயிருக்கலாமென்று மிஸ்டர் ஆன்ரூ ஏராளமாய்ப்பணம் செலவு செய்திருப்பார், ஏழைகளான குடித்தனக்காரர்களுக்கு எங்ஙனம் கிட்டுமென்று என்னுவதற்கிடமில்லை. சாதாரணமாய் ஏழ்மைத்தன்மையடைந்த ஒரு குடியானவனுக்குக்கூட எளிதில்சாத்தியப்படக்கூடியசாதனங்களைக் கொண்டே இப்பண்ணையை விர்த்திசெய்திருக்கிறார். நீராவியந்திரமட்டில் ஒரு குடியானவனே வாங்குவதற்கு முதலில் கஷ்டமாயிருக்கலாம். கிராமத்திலுள்ள 10-குடிகள் சேர்ந்து வாங்கினுல்லொருக்கும் உபயோகமாகும். கிராமவாசிகள் சண்டை சச்சரவுகளையும் கக்ஷிகளையும் விட்டு ஒருமைப்பட்டு மெல்ரோசாபுரம் பண்ணையை மாதிரியாய் வைத்துக்கொண்டு விவசாய சீர்திருத்தலுக்கான விஷயங்களைக் கவனித்து சிர்ப்பட்டு வாழ்வாரென்று நம்புகிறோம்.

## பயிருணவு மூலப்பொருள்கள்.

விவசாயச் சீர்திருத்தமடைய வேண்டுமென்று எண்ணமுடைய ஒருவன் ரஸாயன சாஸ்திரத்திற்குச் சம்பந்தமான சில விஷயங்களை யறியவேண்டியது மிகவும் இன்றியமையாதது. பீடிகையாக பின் வரும் விஷயங்களை கவனித்தல் அவசியம்.

பிரபஞ்சத்திலுள்ள பொருள்கள் இரண்டு வகைத்தானவைகள். பகு பொருள்கள் என்று ஒருவகை, பகாப்பொருள்கள் என்று ஒரு வகை. பகுபொருளை இரண்டு வேறு விதமான பொருள்களாகப் பிரிக்கலாம். பகாப்பொருளை அப்படி பிரிக்கமுடியாது. திருஷ்டாந்தமாக, பொன், வெள்ளி, இரும்பு, காரீயம், வெள்ளீயம், துத்தநாகம் பொட்டாசியம், சோடியம், கால்ஷியம், மெக்னீஷியம், அலியூமினியம், நிக்கல் அல்லது ஜர்மன் சில்வர், பாதரசம், முதலியன பகாப்பொருள்கள் லோகங்களுள் முக்கியமானவை; பிராணவாயு, ஜலகரவாயு சிகண மூலமாகிய நைட்ரோஜன், இலவணகரவாயு, கரி, கந்தகம், பாஸ்கரம், சூல்பணல், முக்கியமான லோகமல்லாத பகாப்பொருள்களுள் முக்கியமானவை. பகாப்பொருள்களென்று ஏன்சொல்லப்படுகின்றனவென்றால் இவைகளில் எதாவதொன்றை இரண்டு அல்லது அதிகமான வெவ்வேறு விதமான பொருள்களாகப் பிரிப்பது எவ்

விதத்திலும் சாத்தியப்படாது. பிரிக்கவேண்டுமென்று அநேகரசாயன சாஸ்திரிகள் முயன்றும் இதுவரையில் சாத்தியப்படவில்லை. ஆகையால் இவைகள் மூலப்பொருள்களென்று பாவிக்கப்பட்டிருக்கின்றன. மூலப்பொருள்கள் (அல்லது பகாப்பொருள்கள்) 67.

[இனிமேல் எந்த ரஸாயன சாஸ்திரியும் இவைகள் ஒவ்வொன்றையும் வெவ்வேறு பொருள்களாகப் பிரித்தல் கூடியதே முடியாது என்று சொல்லுவதற்கில்லை. ஒரே மூலப்பிரகிருதியினின்று பிரபஞ்சத்திலுள்ள சகல பொருள்களும் தோன்றின என்னும் இந்து தத்துவ சாஸ்திரப்படிக்கி ரஸாயன ஆராய்ச்சியில் இனி ஏற்படினும் ஏற்படலாம்.]

இம்மூலப் பொருள்களுள் இரண்டு மூன்று அல்லது அதிகமானவை ஒன்றோடொன்று பல அளவாய் ஐக்கியப்படுவதால் இப்பிரபஞ்சத்திலுள்ள கோடா கோடியானபொருள்கள் உண்டாகின்றன. மேல் குறித்த பகாப்பொருள்களுள் விவசாயத்தில்முக்கியமாய்ச்சம்பந்தப்பட்டவை யாவை யெனில் லோகங்களில் இரும்பு, பொட்டாசியம், சோடியம், கால்ஷியம், மெக்னிஷியமும், லோகமல்லாதவைகளில் பிராணவாயு, ஜலகரவாயு, நிகணமூலமாகிய நைட்ரோஜன், இலவணவாயு, கரி, கந்தகம், பாஸ்கரம், மூலமணலுமாம். இவைகளே பயிர்களுக்கு உணவாயிருக்கப்பட்ட மூலப்பொருள்களாம்.

சிலகாலம் இரும்பைக்காற்றில் வைத்திருந்தால் துருப்பிடித்து சிவந்த பொடியாவது யாவருமறிவார்கள். இரும்பு பிராணவாயுவோடு கலந்து ஐக்கியப்பட்டு அயச்செந்தூரமாகிறது. 'இளைத்தவன் இரும்பத்தின்' என்று சாதாரணமாய்ச் சொல்லுவதுண்டு, எனெனில் இரும்பத்தினால் பலம் வரும். ஆகையால் இரும்பு வலுவைத்தரும் தாது. பொட்டாசியம் சாம்பல் உப்பு அல்லது மர உப்பில் ஐக்கியப்பட்டிருக்கிறது. சாதாரணமாய் நாம் சாப்பிடும் உப்பில் சோடியம் ஐக்கியப்பட்டிருக்கிறது. ஜீவராசிகளிலும் ஸ்தாவரவர்க்கங்களிலும் சோடியம் ஐக்கியப்பட்டிருக்கின்றது. கால்ஷியம் சுண்ணாம்பில் ஐக்கியப்பட்டிருக்கின்றது. மெக்னிஷியம், துத்தநாகம் போன்ற நிறமுடையது. இதைக்கொளுத்தினால் மத்தாப்பைப்போல் எரியும். பிராணவாயு எல்லா ஜீவராசிகளுக்கும் ஸ்தாவரங்களுக்கும் முக்கியமானவை. ஜலகரவாயு என்பது ஜலவாயு. ஜலத்திற்கு மூலப்பொருள்கள் ஜலகரவாயுவும் பிராணவாயுவுமாம். நைட்ரோஜன் என்னும் வாயு நிகணமுண்டாவதற்கு முக்கியமானவை. உடலில் மாமிசம் உண்டாவதற்கும் [illegible] இன்றியமையாதது. கரிஎன்னும்பொருள் எல்லா ஸ்தாவர ஜங்கமங்களிலும் உண்டு. இது முக்கியமானவைகளில் ஒன்று. நெருப்புக்குச்சியின் நுனியில் இருப்பது கந்தகம். நெருப்புக்குச்சியிலேயே கந்தகத்தின் ஒருவஸ்து இருக்கிறது. அதற்கு பாஸ்கவம் என்று பேர். பாஸ்கரத்தால் தான் நெருப்புக்குச்சு பற்றி எரிகிறது. அலியூமினியம் என்பது களிமண்ணுக்கு மூலப்பொருள். [illegible] ஒவ்வொன்றும் பிரத்யேகமாய்ப் பயிருணவாகாது. மற்றைய வஸ்துக்களுடன் ஐக்கியப்பட்டால் மாத்திரமே பயிருக்கு உணவாகும். அலியூமினியம் பயிர்களுக்கு உணவல்லவாயினும் பயிர்வளருவதற்கு முக்கிய ஆதாரமாயிருக்கின்றமையால் விவசாய விஷயத்தில் அதிக பிரதானமுள்ளது. இவ்வஸ்துக்களெல்லாம் பயிர்களுக்கு இன்றியமையாதவை. பயிருணவு சம்பந்தமான மூலப்பொருள்கள் இன்னவையென்று சொன்னோம். இனி பின் வரும் பிரதிகளில் விவசாயப்பொருள்கள் என்ன மூலப்பொருள்களடங்கியதென்றும் ஒவ்வொரு மூலப்பொருளின் குணங்களைப் பற்றியும் விவசாயிகளுக்கு வேண்டிய அவ்வளவு விவரித்துக் காட்டப்படும்.

---

## பம்பாயில் விவசாயக் கைத்தொழில்களின் காக்ஷி.

சில்வருஷங்களாக இந்தியாவில் விவசாயக் கைத்தொழில்களின் காக்ஷி நடந்துவருகிறது. முதல் முதல் இந்தியா ராஜதானியாகிய கல்கத்தாவில் ஆரம்பித்தார்கள். முதல் தடவையாயினும் அங்கு நடந்த காக்ஷி சிறந்ததாகவேயிருந்தது. பிறகு ஆமதாபாத்தில் நடந்தது. அதுவும் சிறந்ததாகவே யிருந்தது. போன வருஷம் சென்னையில் நடந்தது. எல்லாவற்றைக்காட்டிலும் இது வெகு சிறப்பாயிருந்தது. இவ்வருஷம் பம்பாயில் நடக்கப்போகிறது; இது வரையில் நடந்தவைகளுக்கெல்லாம் மேலாயிருக்குமென்று சொல்லுகிறார்கள். இக்காட்சியின் நிருவாகக் கமிட்டியாருடன் கவர்ன்மெண்டார் கலந்து வேலை செய்து வருகிறார்கள். இக்காட்சி இதுவரையில் நடந்த காட்சிகளுக்குள் சிறந்தோங்குமென்பதற்கு [illegible] காரணங்களில் இது ஒன்று. பொருட் காக்ஷிகளைக் கவர்ன்மெண்டார் நேரியாக நடத்தக் கடமைப்பட்டவர்களென்று [illegible]னும் இந்தியர்களே ஒன்றை நடத்த முன் வந்திருக்கிறபோது கவர்ன்மெண்டார் எந்ததெந்த

மாய் உதவிசெய்யக் கூடுமோ, அந்தந்த விதமாயெல்லாம் செய்வது கடமை என்று அறிந்து விவசாய இலாகா தலைவர்க்கு பொதுவாக உத்திரவு செய்தார்கள். அவரும் பொருட்காக்ஷி கமிட்டியின் தலைவரோடு யோசித்து சில விசேஷமான ஏற்பாடுசெய்ய யோசித்திருக்கின்றார்.

சென்னையில் நடந்த காக்ஷியில் விவசாய சம்பந்தமான சாமான்கள் அதிகமாகக் காட்டப்படவில்லை. பம்பாயில் அப்பேர்ப்பட்ட சாமான்களைக்காட்ட விசேஷமான கவலையெடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றது, தண்ணீர் ஏற்றங்களும், பம்புகளும், ஐரோப்பியக் கலப்பைகளும் இந்தியா கலப்பைகளும், விதைகள் தாருக்கள் எண்ணைகள் இவைகளும் பஞ்சுகொட்டையடிக்கும் யந்திரம் அரம் உருளி இவைகளும் பால்தயிர் வெண்ணை இவைகள் செய்யும் விதங்களும் ராஜதானியில் பற்பல விதத்தாருள்ள மண்களும் எண்ணெய் செய்யவும் நாரெடுக்கவும் வேண்டிய யந்திரங்களும் கரும்புஆலைகளும், தூத்தவும் பதரடிக்கவும் உபயோகப்படும் யந்திரங்களும், பயிரை அழிக்கும் விதம் விதமான பூச்சிகளும் அவைகளைக் கொல்லும் வகைகளும் வாழைநார் உரிக்கும் யந்திரமும் இவைகள் இன்னும் விவசாய சம்பந்தமான கருவிகளும் யந்திரங்களும் கொண்டு வந்து காட்சியில் காட்டப்படும். இப்படிக்காட்டுவதில் கவர்ன்மெண்டுவிவசாய இலாகா உத்தியோகஸ்தர்கள் காக்ஷிக்கு வந்திருந்து தாங்கள் உபயோகித்துகாட்டக்கூடிய யந்திரங்களையும் கவலை கலப்பைமுதலான கருவிகளையும் உபயோகித்துக் காட்டுவார்கள். நிலத்தைப்பலவகைக் கலப்பைகளில்உழுதுக்காட்டி எந்தக் கலப்பை உயர்த்தி எது இளப்பமென்று விவசாயிகள் தெளிவு கொள்ளுவதற்கும் ஏற்பாடுசெய்யப்பட்டு வருகிறது. இப்படி செய்யப்பட்டு வருவது ஒரு விசேஷமாயினும், இன்னொரு விசேஷமும் பம்பாய் காக்ஷியில் நடக்கப்போகின்றது. பிரதி ஜில்லாவிலிருந்தும் 20 பேருக்கு அதிகப்படாமல் கிராமத்து பிரசுதார்களில் புத்திமான்களாயும் தக்கவர்களாயும்பார்த்து அனுப்பவும் அவர்களின் போகவர ரயில்செலவையும்பம்பாயிலிருக்கிற காலத்துக்குப்படியும்கவர்ன்மெண்டுசெலவில்கொடுத்து ஏற்பாடு செய்யும்படியாக கலெக்டர் அவர்களுக்கு கவர்ன்மெண்டார் உத்திரவு செய்திருக்கிறார்கள். இந்த ஏற்பாடு வெகு நன்மையைச் செய்யுமென்பதில் சந்தேகமில்லை. கிராமத்தில் பெரிய குடித்தனக்காரனாகவோ அல்லது கிராமாதிகாரியாகவோ இருப்பவன் சர்க்



கார்செலவில் பம்பாய்க்குப்போய் வருவது எப்போதும் கிடைக்கக்கூடிய கௌரவமல்ல. ஆகையால் அப்பேர்ப்பட்ட கௌரவத்தைப் பெற யோக்கியதையுள்ளவர்களென்று அவர்கள் காட்ட அக்கறை கொள்ளுவார்களென்று நம்பலாம். பம்பாயிக்குப் போய் அங்கு காக்ஷியிற் பார்க்கும் கவலை, கலப்பை யந்திரங்கள் ஆலைகள் இவைகளை உபயோகித்துக் காட்டப்பார்த்து மூடர்களாகத் திரும்பமாட்டார்கள். கவனத்தைச் செலுத்தி அவருக்கு தோன்றும் புதுமைகளை அறிந்து திரும்பி தங்கள் கிராமத்து சனங்களுக்குத் தாங்கள் பார்த்ததைச் சொல்லுவார்கள். ஒருக்கால் சர்க்காராவது கமிட்டியாவது இந்த விவசாயம் கருவிகளில் விசேஷமானவைகளில்சிலவற்றை விலைக்கு வாங்கிவைத்து அவைகளை வாங்க விரும்பும் விவசாயிகளுக்கு விற்றாலும் விற்ககூடும். மொத்தத்துக்கு இந்தக் காக்ஷிகளின் நோக்கம் தொழிலில் அபிவிருத்தி உண்டாவதே யன்றிஒரு மாசம்விநோதமான சாமான்களை அடுக்கி வைத்து வேடிக்கை காட்டி பிற்பாடு காக்ஷி நடந்ததையே ஜனங்கள் மறந்துவிடுவதன்று. சென்னையில் அப்படியே செய்துவிட்டார்கள். சுமார் லக்ஷம் ரூபாய் போலச்சிலவு செய்து காக்ஷி சேர்த்தார்கள். லக்ஷம் ஜனங்கள் வந்து பார்த்தார்கள். ஒவ்வொருவரும் சந்தோஷப்பட்டார்கள். அத்துடன் காக்ஷியின் பெருமையமைந்தது. அது நடந்து இப்போது 9-மாசமேயானாலும் அதைப்பற்றி நினைக்கிறவர்களையுங்காணோம் கேட்கிறவர்களையுங்காணோம். கவர்ன்மெண்டார் 10,000-ரூபா கொடுத்து ஒத்தாசை செய்தார்கள். அவர்களாவது ஏனென்று கேட்கிறார்களா. அதுவுமில்லை. ஏதோ காங்கிரஸோடு பொருட்காக்ஷியொன்று நடத்துவது கிரமமாய் ஏற்பட்டு விட்டது. காங்கிரஸை நடத்துவோருக்கு கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தரிடமிருந்து பெருமைவருகிறதில்லை. பொருட்காக்ஷி நடத்துவோரைக் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களும் ஆங்லேயபத்திராதிபர்களும் துதித்துப்பேசுகிறார்கள். அதற்காசைப்பட்டு சென்னையில் பெரியமனுஷர்போட்டிப் போட்டு முன்வந்து சிலகாலம் சத்தமிட்டார்கள். இப்போது அவர்கள் எங்கே போனார்களோ தெரியவில்லை. அவர்களிட பேச்சையும் காணோம் மூச்சையும் காணோம். சென்னைப்பட்டணம் தேசாபிமானிகளைப்போல் பம்பாய் தேசாபிமானிகளும் டம்பப் பிரியர்களாயில்லாமல் தேசத்து நன்மையை விருத்தி செய்யும் வழியை நாடுவார்களென நம்புகிறோம்.

[மித்திரன்]

## மதராஸ் ஹைகோர்ட்டு

(பிரதான ஜட்ஜிக்கும் ஜட்ஜி சுப்பிரமணிய அய்யருக்கும் முன்பாக)

விவசாயிகளின் நீர்ப்பாய்ச்சல் சுதந்தரம்.

### ஒரு முக்கியமான தீர்ப்பு.

திருநெல்வேலி ஜில்லாவில் தாம்பிரபரணி ஆற்றிலிருந்து கொருக்கைக்குளத்துக்கு ஒரு கால்வாய் போகிறது. அந்தக்கால்வாய் தாம்பிரபரணி ஆற்றுஜலத்தை அந்த குளத்துக்குக்கொண்டுபோய்ச் சேர்ப்பதற்காக ஏற்பட்டுள்ளது. அந்தகால்வாயில் குளம் நிறம்புவதற்கு எவ்வளவு ஜலம் வேண்டியிருக்குமோ அதைவிட 5-பங்கு ஜலம் அதிகமாய்ப்போகிற வழக்கமுண்டாம். அதுபற்றி 1882-ம் வருஷத்தில் மராமத்திலாகா அதிகாரிகளின் யோசனையின்மேல் குளத்துக்கு வேண்டாத ஜலத்தைப்போக்கிவிடுவதற்கு கலுங்கல் (நீர்ப்போக்கி) ஒன்று கட்டினார்களாம். அந்தக்கலுங்கல் அதிகப்பட்டத்தண்ணீர் அவ்வளவையும் அடித்துக்கொண்டு போகும்படி அவ்வளவு பெரிதாயில்லாமைபற்றி அது எந்த விடத்தில் கட்டப்பட்டிருக்கிறதோ அந்த இடத்தை யொட்டியுள்ள நிலங்கள் எப்போதும் வெள்ளக்காடாய் நிற்கின்றனவாம். அது பற்றி அந்நிலங்கள் சாகுபடிக்கு லாயக்கில்லாமலிருக்கின்றனவாம். அந்நிலங்களின் சொந்தக்காரர்கள் அந்தக்கலுங்கல்வழியே அதிக ஜலத்தை திறந்து விடக்கூடாதென்று தடங்கல் உத்திரவுபெறுவதற்காக ஸிவில் வழக்கொன்று தொடுக்க அதிகாரம் பெற்று டிஸ்டிரிக்ட் முனிஸீப்கோர்ட்டில் வழக்கிட்டதாகத்தெரிகிறது. வழக்கிட்டும் காரியம் அனுகூலமாகாமல் டிஸ்டிரிக்ட்கோர்ட்டில் அப்பீல் செய்யப்பட்டது. டிஸ்டிரிக்ட் ஜட்ஜ்முனிஸீப்செய்த தீர்ப்பையே உறுதி செய்தார். அதன்மேல் அவ்விவசாயிகள் ஹைகோர்ட்டுக்கு அப்பீல்செய்ய, அந்தக்கேஸை விசாரணைசெய்த சீப் ஜஸ்டிஸும் ஜஸ்டிஸ் சுப்பிரமணி ஐயரும் கீழ்கோர்ட்டுதீர்ப்புகளை மாற்றி பிரதிவாதிகள் (கவர்ன்மெண்டார்) வாதிகளின் நிலங்களில் ஜலம்கட்டி நில்லாதபடி பார்க்கக்கடமைப்பட்டிருக்கிறார்களென்றும், வாதிகளுக்கு வியாச்சிய செலவுத்தொகையை ஒத்துக்கொடுக்கவேண்டுமென்றும் தீர்ப்புசெய்தார்கள். நிர்வாக அதிகாரிகள் தாங்கள் செய்ததேசரியென்று நினைத்து அமுல்நடத்தும் வழக்கத்துக்குத் தளர்ச்சி யுண்டாகும்படி இம்மாதிரி தீர்



ப்புகள் சொல்லப்படுவதை நமது மனச்சாட்சி ஒன்றுக்கல்லாமல் மற்ற எதற்கும் கட்டுப்படாதிருக்கும் ஹைகோர்ட் ஜட்ஜிகளாகிய நீதி மூர்த்திகளிடம் பார்க்கலாமே தவிற வேறு எங்கே பார்ப்பது? கவர்ன்மெண்டார் ஏழை விவசாயிகளின் நிலம் தண்ணீரில் மிதந்தாலும் தங்களுக்குக் கவலையில்லை யென்று நினைத்திருந்தது நியாய விரோதமான செய்கையென்று இப்போது வெளியாய் விட்டது. இனி கொருக்கைக் கால்வாய்க் கலுங்கல் ஜலம் அடுத்துள்ள நிலங்களில் நில்லாதபடி பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்புக் கவர்ன்மெண்டாருடையதாகும். இந்த வியாச்சியத்தில் பிரதிவாதியாய் நின்ற கவர்ன்மெண்டார், பக்கத்துள்ள வயல்கள் ஜலத்தில் முழுகி நிற்பதற்கு கலுங்கல் காரணமாக மாட்டாதென்றும், 1895ம் வருஷம் வெள்ளமொன்று புறப்பட்டு கலுங்கலுக்கும் கால்வாய்க்கும் பக்கத்தேயுள்ள வயல்களை அடித்துக் கொண்டுபோய் விட்டது தான் காரணமென்றும், அப்படி வெள்ளத்தில் முழுகிய பிறகு அந்த நன்செய்கள் பள்ளநிலங்களாய் விட, கலுங்கலில் விழும் கால்வாய் ஜலம் அக்கலுங்கலைவிட்டு பள்ளமாயுள்ள நிலங்களைப்போய்ச் சேர்ந்து குளம்போலத்தேங்கிப்போய் விடுகிறதென்றும், அந்நிலங்களை மண்போட்டு நிரப்பி சற்றுமேடாக்க அவைகளின் சொந்தக்காரர்கள் கடமைப்பட்டிருக்கிறார்களென்றும் வாதித்தார்கள். அந்தக்கலுங்கல் பக்கத்தேயுள்ள நிலச்சுவான்தார்களுக்கு ஏதாவது அசௌகரியங்கள் நேர்ந்தால் அந்த அசௌகரியங்களை விலக்கிக்கொள்ள அவர்களே வழி தேடிக்கொள்ள வேண்டுமே யொழிய பல விவசாயிகளுக்கும் நன்மை செய்வதை தங்களால் நிறுத்த முடியாதென்றும் வாதித்தார்கள். அவர்களது வாதம் டிஸ்டிரிக்ட் ஜட்ஜியால் அங்கிகரிக்கப்பட்டது. ஹைகோர்ட் சீப்ஜஸ்டிஸ், டிஸ்டிரிக்ட் ஜட்ஜி அபிப்பிராயப்பட்டபடி அபிப்பிராயபடவில்லை. கவர்ன்மெண்ட் வக்கீல் 1895-ம் வருஷத்து வெள்ளத்துக்கு பிறகு நிலங்கள் சற்று பள்ளமாய்ப் போகாதிருந்திருக்குமாயின் அந்நிலங்களில் ஜலம் கட்டி நின்றிராது என்று சொல்லி கவர்ன்மெண்டாருக்கு கலுங்கல் வழியாய் அதிக ஜலத்தைப்போக்க பாத்தியமுண்டென்றார். அதற்கு சீப் ஜஸ்டிஸ் கலுங்கல் 1882-ம் வருஷத்தில் கட்டப்படாமலிருந்திருக்குமாயின் கால்வாய் ஜலம் தங்கள் நிலம் எவ்வளவு பள்ளமாயிருந்தாலும் அதனில் பொசிந்து கூட இருக்கமாட்டாது என்கிற கட்சி சொல்லப்படுமல்லவா என்கிறார். விவசாயி

கள் தங்கள் நிலங்களை மண்போட்டு உயர்த்திக்கொள்ள வேண்டுமென்று கவர்ன்மெண்ட் வக்கீல் சொன்னதை சீப் ஜஸ்டிஸ் ஒப்பவில்லை. சீப்ஜஸ்டிஸ் குளம் உடைந்து போகாமலிருப்பதற்காக கலுங்கல் கட்டவேண்டியிருந்ததென்றும், அக்கலுங்கல் எச்சரிக்கைக் குறைவாய்க்கட்டப்படவில்லையென்றும் சொல்லப்பட்டாலும், நிலச்சுவான்தார்களுக்கு நிலங்களை சேதம் வராமல் காத்துக்கொள்ளும்படியான சுதந்தரம் இல்லாமற்போய் விடமாட்டாது என்று அபிப்பிராயப்படுகிறார். அச்சுதந்தரத்துக்கு யாதொரு சேடும் வந்துவிடமாட்டாது என்று அபிப்பிராயப்பட்டே அவர் நிலச்சுவான்தார்கள் பக்கத்துக்கு அனுகூலமாய்த் தீர்ப்புச்சொன்னார். கவர்ன்மெண்டார் நீர்ப்பாய்ச்சல் வசதிகளைச்செய்து கொடுப்பதில் விசேஷ அக்கறையுள்ளவர்களாயிருக்கிறார்கள் என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை.

[கிராமாதிகாரி கஜட்]

## தழை எரு.

நாளுக்குநாள் தேவை அதிகரித்துக்கொண்டேவருகிற தழையெருவுக்கு நிமித்தம் என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றதென்று கவர்ன்மெண்டில் விசாரணையிருந்தது. ஜில்லாகலெக்டர்களில் பெரும்பான்மையோர், எவ்வளவு தழை எரு தேவையோ அவ்வளவுக்கு அதிகமாயிருப்பதாயும் தழை எருச் செடிகளை விர்த்தி செய்யவேண்டியதற்காக ஸ்பெஷலாய் ஏற்பாடு செய்ய வேண்டியது அனாவசியமென்றும் ரிபோர்ட்டு செய்தார்கள். தஞ்சை டெல்டாவின் ஜில்லா காட்டு இலாகாவின் தலைவர், தற்காலத்தில் ரிசர்வ் செய்யப்படாத பூமியினின்றே தழைஎரு போதுமானவ்வளவு அகப்படுகிறதென்றும் தழை எரு கொடுக்கும் செடிகளை விதைத்து விர்த்திசெய்ய வேண்டியது அவசியமில்லையென்றும் இது விஷயமாக ரிசர்வ் காட்டில் செலவழிக்கும் பணம் நஷ்டந்தான் என்றும் சொன்னார். கலெக்டர் ஜில்லாகாட்டு இலாகாத்தலைவர் இவர்கள் இரண்டுபேரைக்காட்டிலும் தஞ்சை டெல்டாவின் தன்மையும் தேவையான விஷயங்களையும் நேரப்படித்தறிந்த மிஸ்டர் ஜே. ஜி. பர்ன் என்னும் ஸ்பெஷல் செட்டில்மெண்டு ஆபீசர் கவர்ன்மெண்டாருக்கு ரிபோர்ட்டு செய்திருக்கிறார். அவர் ரிபோர்ட்டில் சொல்லுவதாவது. நஞ்சையிலும் புஞ்சையிலும் நீர்ப்பாய்ச்சல் பரவினதால் தழைஎரு அதிகமாய்த்தேவையாயிருக்கிறது. ஜனங்கள் அதிகமாயுள்ள கிராமங்களின் அருகாமையிலுள்ள புறம்போக்கு நிலம் நாளுக்குநாள் குறுகிவருவதாலும் காட்டிலாகா ரிசர்வ் நீடிக்கவினாலும், குடிகள் தழைஎரு நிமித்தம் அதிக தூரம்போக வேண்டியதா



யிருக்கின்றது. இவ்வளவுக்கு இவ்வளவு பணம் என்று ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டணை பணத்தைச்செலுத்தி தழை எருவைச்சேகரிக்க வேண்டியிருக்கின்றது. சுமார் 20மயில் தூரத்தினின்று தழைஎருவை வண்டியில் போட்டுக்கொண்டு வருகிறார்கள். சில கிராமங்களில், தரிசு நிலங்களைக் குடியானவர் அவைகளில் முளைத்திருக்கும் காட்டவுரிமைக்காக கவர்ன்மெண்டாரிடமிருந்து வாங்கியிருக்கிறார்கள். ஆத்தூரில் வாதநாராயணமரத்தை கிணறுகளின் சுற்றிலும் தழைக்காக வைத்திருக்கிறார்கள்." குடியானவர்கள் தங்கள் தங்கள் புலங்களில் செய்யவேண்டிய வேலைகளைவிட்டு தழை எருவைத் தேடிச்செல்வதும் தழைஎருவை பயிராக்குவதற்காகவே தரிசு நிலத்தை பணம் செலுத்தி வாங்குவதும் தழைஎரு கிடைப்பது அருமையாயிருக்கிறதென்பதும் குடிகள் தேவையானவ்வளவு தழைஎரு சம்பாதிக்க அதிக சிரமப்படுகிறார்களென்பதும் விளங்குகிறது. இப்படி இருக்க கலெக்டரும் காட்டிலாகா ஆபீசரும் தேவையானதற்கு மேற்பட்ட தழை இருப்பதாயும் தழைக்கென்று ஸ்பெஷல் ஏற்பாடுகள் ஒன்றும் தேவையில்லையென்றும்சொல்லுகிறார்கள். பிரஜைகளின் சுகதுக்கங்களைக் கவனித்து வேண்டியவைகளைச் செய்யவேண்டிய ஜில்லா கலெக்டரே இவ்விதம் அபிப்பிராயப்பட்டால் குடிகளுக்கு இதைவிட துர்அதிருஷ்டம் வேறு என்ன.

இக்கலெக்டரின் அபிப்பிராயத்தை ரிவினியுபோர்டார் எடுத்துக்கொள்ளவில்லை. ஒப்பத்தக்க விதத்திலே தழை எரு உடனுக்குடனே வேண்டியவளவு அகப்படும் பக்ஷத்தில் அநேகர் தழை எருவை அபேக்ஷிப்பார்களென்றும் அப்போது தழை எரு அதிகமாய்த் தேவையிருக்குமென்றும் அபிப்பிராயப்பட்டு குடிகளுக்கு வேண்டியதற்கு மேல் தழை எரு இப்போதே இருக்கிறதென்பதை கலெக்டர்கள் விசாரணை செய்து அங்கீகரிக்க வேணுமென்றும் தெரிவித்தார்கள். போர்டாரின் இந்த உத்திரவு, குடிகள் வாங்கத்தக்க விலையில் விற்கும்படி தழை எருவை விர்த்தியாக்குமென்று நம்புகிறோம்.

தழை எரு விவசாயிகளுக்கு அதிக உபயோகமானதாகையால் தழை போதுமானவ்வளவுகிடைக்காவிட்டால் அதைப்பற்றி ஜில்லாகலெக்டருக்கும் ரிவினியுபோர்டாருக்கும் விதமாய் எடுத்துக்காட்டிவரும் பக்ஷத்தில் நன்மையுண்டு மென்பதற்குச் சந்தேகமில்லை.

# NEWS & NOTES.

## வர்த்தமானக்குறிப்பு.

நாகப்பாம்பு நாயைக்கடித்தது:—சிலோனில், மிஸ்டர் ஒயிட் என்பவரின் நாய்களில் மூன்றை நாகப்பாம்பு கடித்துவிட்டதாம். நாய்கள் முதல் முதலில் பாம்பைப்பார்த்து அதன்மேல் விழுந்துக் கடித்துக் கொல்லும்படி தாக்கியதாம். அப்போது பாம்பு நாய்களைக் க

டித்துவிட்டதாம். சிலோன் டயம்ஸில் பிரசுரித்திருந்தபடி எலுமிச்சம்பழ ரசத்தை நாய்களுக்கு உள்ளுக்குக் கொடுத்தாராம். நாய்கள் விஷம் நீங்கி இப்போது சுகமாயிருக்கின்றனவாம்.

ஒருஸ்திரீயின் சாகசம்:—ஐரோப்பாவிலுள்ள ஜர்மனி தேசத்தில் ஒரு ஸ்திரீ 33,750-ரூபாயுள்ள செக்குகளுக்கு பொர்ஜரி கையொப்பமிட்டு மோசம் செய்து தப்பித்துக் கொள்ளும்படி இங்கிலாண்டுக்கு ஓடிப்போய்விட்டாள். இங்கிலாண்டில் இவளைக் கைதியாக்கிக் கப்பலிலேற்றி ஜர்மனிக்குக்கொண்டு போகும்போது இவளுக்குக் கப்பலில் தனியான ஒருஸ்பெஷல் அறைநியமித்து இரண்டு போலீஸார் காவலிருந்தார்கள். ஒருநாள் காலையில் தனக்குத் தலைநோவென்றும் காற்றுவாங்ககப்பலின் மேல்புரம்போகவேணுமென்றும் சொன்னதின்பேரில் கப்பலின் மேல்புறத்தில் போய்க் காற்று வாங்கும்படி இடங்கொடுத்து காவலாளிகள் சற்று தூரத்தில் நின்றுகொண்டிருந்தார்கள். கப்பலும் ஜர்மனி தேசக்கரைக்கு 200 கஜதூரத்தில் போய்க்கொண்டிருந்தது. இவள் சற்று நேரம் பராக்குக்காட்டி திடீரென்று சமுத்திரத்தில் குதித்துவிட்டாள். கப்பல் அதிக வேகமாய்ப் போய்க்கொண்டிருந்தமையால் மறைந்துவிட்டாள். கப்பலை உடனே நிறுத்திக் கைதியைக் கண்டு பிடிக்கும்படியான பிரயத்தனங்களைச் சாத்தியமான வரையில் செய்தும் அகப்படவில்லை. இவள் நீச்சலில் கைதேர்ந்தவள் என்றும் ஜலத்திற்குள்ளேயே கொஞ்சதூரம் போய் கரையேறித் தப்பித்துக்கொண்டதாயும் அபிப்பிராயப்படுகிறார்கள். அப்படியாயின் இவளிட துணிச்சலான தந்திரம் வியக்கத்தக்கது.

பாம்புக்கடிக்கு மண்மருந்து:—காசர்ட்டா என்னும் பட்டணத்துக்கு அருகாமையிலுள்ள ஒரு கிராமத்தில் ஒருசிறுமி வைக்கோல் உலர்த்திக்கொண்டிருந்தபோது அவள் காலில் பாம்பு கடித்துவிட்டது. தகப்பன் இச்சிறுமியை வண்டியில் போட்டுக்கொண்டு காசர்ட்டாவுக்குப் போய் டாக்டருக்குக் காண்பித்தான். டாக்டர் பிழைக்காது என்று சொல்லிவிட்டான். கால் வீங்கிவிட்டது. பேச்சு மூச்சில்லை இனி சாத்தியமில்லை என்றான். தகப்பன் மனவியாகூலத்துடன் தன்வீட்டுக்குப் போய்விட்டான். இவனுக்கு பூர்வ சம்பிரதாயமொன்று ஞாபகம் வந்தது. கடைசியாய் அச்சம்பிரதாயத்தைச்செய்து பார்ப்போமென்று தீர்மானித்துச் செய்தான். விஷம் நீங்கி பெண் பிழைத்தது. அதென்னவெனில், பூமியில் ஒரு குழி



வெட்டி சிறுமியை வஸ்திரங்களையெல்லாம் நீக்கி நிர்வாணமாய் அக்குழியிலிட்டு கழுத்துவரையில் மண்போட்டுமூடிவிட்டான். காசர்ட்டாவின் மேயர் இது கொடிய செய்கையென்று போலீசாரைப் பிரவேசிக்கும்படி செய்தார். ஊரார் எல்லாம் ஒன்று கூடி போலீசாரைப் பார்த்து நீங்களிதில் பிரவேசிப்பிராகில் பழுக்கப் பார்த்துவிடுவோமென்றார்கள். இருபத்துநாலுமணி நேரமானவுடன் இப்பெண்ணை வெளியிலெடுத்துப் பார்த்ததில் பூர்வ சௌக்கிய ஸ்திதியடைந்திருந்தாளாம். பெண் பிழைத்து விட்டாள். காசர்ட்டா பட்டணத்தின் போலீஸ் தலைவர் இது உண்மையென்று சர்டிபிகேட் கொடுத்திருக்கிறார்.

மனமெரிந்த புருஷன் பழிவாங்கினான்:—சிலோனில் கனவாடிப் பட்டித்தோட்டத்தில் ஒரு மகமதியன் தன் மனைவியின்மேல் சந்தேகப்பட்டுக்கொண்டேயிருந்தான். ஒருநாள் இரவில் தான் ஏதோ வேலையாக வெகுதூரம் போகவேண்டியிருப்பதாயும் தான் வருமளவும் ஜாக்கிரதையாயிருக்கும்படியும் சொல்லி வீட்டை விட்டுபோய் விட்டான். திடீரென்று பாதிராத்திரியில் வந்து விட்டான். இவன் கள்ளபுருஷனையும் வீட்டில் கண்டான். கள்ளபுருஷன் இவன் தங்கை புருஷனே. தங்கைபுருஷனிடம் பக்ஷங்காட்டி பாதிராத்திரியில் இருட்டில் போகக்கூடாது, விடிந்துபோகலாமென்று பிரியவசனம் சொல்லி தன் அறையிலேபடுக்க இடங்கொடுத்தான். புருஷன் பாதிராத்திரியில் எழுந்து தன் மனைவியிடம்போய், கற்பழிந்தவளென்று பலவாறாய் நிந்தித்து பிறகு அவளைக் குத்தினான். இவன் கொலைச் செய்கையைத் தடுக்கப்போன தங்கை புருஷனையும் குத்தினான். பிறகு தன்னையும் கொலைசெய்துக்கொண்டான்.

ஜர்மன் சில்வர் நாணயம்:—இப்போது வழங்கிவரும் செம்பு நாணயங்களுக்குப் பதிலாக ஜர்மன் சில்வர் நாணயங்கள் ஏற்படப்போகின்றனவாம்.

கண்டியில்கொலை.—சிலோனிலுள்ள கண்டிநகரில்ஒரு சோல்ஜர்இரண்டு போலீஸ் கான்ஸ்டேபில்களை சுட்டுவிட்டானாம். விசாரணையில் போலீசார் தன் ஸ்திரீயை அலை கழித்ததாயும் அதன் பேரில் தனக்கு கோபம் பிறந்து சுட்டுவிட்டதாயும் ஒத்துக்கொண்டான். இந்த குற்றவாளி தன்னை சுட்டுவிட வேணுமென்றும் தூக்குப்போடவேண்டாமென்று விரும்பிக்கேட்டுக்கொண்டானாம்.

ஹூக்ளிநதி வெள்ளத்தால் நஷ்டம். வங்காளமாகாணத்தில் ஹூக்ளிநதியின் பிரவாகத்தால் சுமார் 30-கிராமங்களின் பயிர்கள் சேதப்பட்டு போய் விட்டதாம் இதனால் சுமார் 2,55,000 ரூபாய் வரையில் விவசாயிகளுக்குநஷ்டமாம்.

மின்னல் நெருப்பு ரங்கூனில் விழுந்தது.—ரங்கூனில் ராணுவமிருக்குமிடத்தில் மின்னல்நெருப்பு விழுந்ததாம். விழும்போது காது செவிடு படும்படி பேரொலி கேட்டதாம். டப்பரின் ஆஸ்பத்திரியின் அருகில் தீப்பந்து வட்டிவமாய் மின்னல் விழுந்து டாக்டர் தாம்ஸனிட சமயல்காரன் காலை எரித்து பக்கத்தில் கட்டியிருந்த ஐந்து பசுக்களையும் கொன்றுவிட்டது. இது விழுந்தபோது சிலருக்கு கந்தகநாற்றம் அடித்ததாம். [மித்திரன்]

சக்ரவர்த்தி முத்திரையுள்ள ரூபாயை வாங்க பயப்படுகிறார்கள். எட்வர்ட் சக்ரவர்த்தி முத்திரையுள்ள ரூபாய்களில் சில கள்ளநாணய மென்று அறிந்து ஆமதாபாத்தில் அவற்றை வைத்திருந்தவரை போலீஸார் கைதுசெய்திருப்பதால் இந்நகரிலுள்ள அநேகர் ஜனங்களிடமிருந்து சக்ரவர்த்தி முத்திரையிட்ட ரூபாய்களை வாங்க பயப்படுகிறார்களாம். விக்டோரியா ராஜாத்தியின் தலையுள்ள ரூபாயே வேண்டுமென்கிறார்களாம். இதனால் வியாபாரக் காரியங்களில் அதிக கஷ்டமுண்டாகிற தென்றும் தெரிகிறது. கவுரவங் கொண்ட நல்ல வியாபாரிகளின் பணப்பெட்டிகளைக் கூட சோதிக்கப்போகிறார்களாம். நல்ல நாணயத்திற்கும் கள்ள நாணயத்திற்குமுள்ள பேதம் தெரிந்தால் உபத்திரவம் நீங்கும். [மித்திரன்]

### கிறிஸ்தவமிஷனும் ஓர் பெங்காளிப் பெண்ணும்.

நாளது மாதம் 22-ந்தேதி கல்கட்டாவில் சீப்பிரவிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டு முன் ஒரு பங்காளியானவன், 16-வயதுள்ள ஓர் பெண்ணை கள்ளத்தனமாய்க் கொண்டு வந்து கிறிஸ்தவமிஷனில் கொடுத்துவிட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டான். கோர்ட்டார் அந்தப் பெண்ணைக் கேட்டபோது அவள் தானே சுயேச்சையாய் வந்ததாகவும், தன்னை ஒருவரும் கட்டாயம் செய்யவில்லை யென்றும் சொன்னாள். ஒரு ஐரோப்பிய மிஷனெரி மாதுதன்னிடம் மேற்படி பெண் நாளது மாதம் 8-ந்தேதி யன்று வந்ததாகவும். ஒன்பது வருஷங்களுக்குமுன் ஒரு கிறிஸ்தவப்பாடசாலையில் படித்துக்கொண்டிருந்தவளென்று தான் அடையாளம் கண்டு தன்னிடமே இருக்கச் சொன்னதாகவும், அந்தப்பெண் அவளிஷ்டப்படி தான் மிஷனிலிருப்பதாகவும், அவள் வெளியே போக விரும்பினால் அப்படியே போவதைப் பற்றித் தனக்கு யாதொரு ஆக்ஷேபமில்லையாதென்றும்' வாக்கு மூலம் கொடுத்தாள். மாஜிஸ்ட்ரேட் கேசைத் தள்ளிவிட்டார். அந்தப் பெண்ணை உபத்திரவம் செய்யவாவது தடுக்கவாவது கூடாதென்று உத்திரவு செய்தார். பெண் மறுபடியும் மிஷனுக்குப் போய்விட்டாள். [மித்திரன்]

பரிதாபமான ஓர் கொலை:--பழவங்காடி கிராமத்தில் தாமசித்துக்கொண்டு கடையில் 15-ரூபாய் சம்பளத்திலிருந்த சர்மசப்பன் என்னும் பெயருடைய



22-வயதுள்ள கருங்குளம் பிராமணப்பையன் ஒருவன் நாளது மாதம் 12-ந்தேதி சனிக்கிழமை யன்று இரவு தன்னுடைய இஷ்டன் ஒருவன் கொல்லத்துக்கு ஏதோ காரியமாய் கூப்பிட்டதை நம்பி வீட்டில் சாப்பிட்டபின் தாய்தகப்பனாரிடம் விடைபெற்றுக்கொண்டு தண்ணீர் மார்க்கமாய் புறப்பட்டான். கொல்லத்துக்கு அழைத்துக்கொண்டு போன மாந்தோணி பொதித்துக்கொண்ட புலிக்கொப்பாகிய இஷ்டன் தக்க சில பொய்ப்பேச்சுகளைச் சொல்லி ஏமாற்றி "ஆற்றங்கல்" என்னும் ஊரில் தாமசிக்கும்படி ஏற்பாடு செய்தது மல்லாமல் இந்தப்பையனுக்கு ஏற்கனவே பகையான விரோதம் முள்ளவனும் மனைவியின் சம்பந்தமுள்ளவனுமாகிய ஒருவன் வீட்டிற்கு வெகு நிர்ப்பந்தம் செய்து அழைத்துக்கொண்டுபோய் சாப்பாடு முதலியவைகளைப் பகலில் செய்துவைத்தான், அன்று மாலை நேரத்தில் மேற்படி வீட்டு பெண்பிள்ளை பக்கத்திலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் நுழைந்து காலையில் வந்தபையனுக்கு உடம்பு சுகக்குறைவாயிருக்கிறது என்று சொல்லிவிட்டு வந்தாளாம். இவ்வளவு தான் ஊராருக்குத் தெரியும். நேற்று அதிகாலையில் வெகு ஜாக்கிரதை செய்து பிரேதத்தை அடக்கம் செய்துவிட்டார்கள். அத்துடன் மேற்படி பையனுடைய தகப்பனுக்கு நேற்று மாலை தான் தந்தி கொடுத்தார்களாம். மேற்படியார் அலறியடித்துக்கொண்டு ஒருக்கால் சமாசாரம் பொய்யாயிருக்குமென்று நினைத்து உடன் புறப்பட்டு மேற்படி ஊர் சென்று விசாரித்ததில் அவ்விடத்திலுள்ள அனைவரும்பொறுக்காமல்சிலர் 4-5 ஆளைவிட்டு அடித்துக்கொன்றுவிட்டதாகவும், சிலர் விஷத்தைக்கொடுத்து கொன்றுவிட்டார்களென்றும்சொன்ன சொற்களை கேட்டுக்கொண்டு இன்று திரும்பிவந்துவிட்டதாகவும், இவ்வளவு சமாசாரங்களையும் அவரே பகிரங்கமாய்ச் சொல்லி துக்கிப்பதாகவும் பிரஸ்தாபம். பிள்ளையின் தகப்பனாகிய பிச்சுவய்யன் என்பவர் போலீசில் ஒரு மனு கொடுத்திருப்பதாய்த் தெரிகிறது. ஸர்கார் வாதியாயிருந்தாவது கேஸ் நடக்குமென்றும் திட்டமாய் ருசுவாகக் கூடுமென்றும் கருதப்படுகிறது. [மித்திரன்]

வேறு ஒரு மரணம்:—திருவனந்தபுரத்தில் பத்மதீர்த்தத்தில் 30 - வயதுள்ள அச்சியென்னும் ஒரு ஸ்திரீ பக்கத்தில் யாருமில்லா திருக்கையில் ஸ்நானம் செய்ய இறங்கியதில் படிகள் எங்கே பார்த்தாலும் வழுக்கு ஜாஸ்தியாகையால் தவறி விழுந்துவிட்டாள். இதைத்தொலையிலிருந்த ஒரு பிராமணன் ஓடிவந்து தேடிப்பார்த்து எடுக்குமுன் ஜீவன்போய் பிரேதமாய்விட்டது. இந்தக் குளத்தில் இம்மாதிரி வருஷந்தோறும் 1-2 பலிகள் ஏற்படாமலிருக்கிறதில்லை. [மித்திரன்]

### இந்தியா செக்ரடேரியின் மீது வியாச்சியம்.

திருச்சிறுப்பள்ளி (கோட்டை) யிலிருக்கும் மோத்தி ரங்கையா செட்டி திருக்கோத்துவால் சாவடி போஸ்ட் ஆபீஸில் ரூபா 115 - பெறுமான வெள்ளி நகையுள்ள ஓர் வி. பி. பார்ஸலை இன்ஷ்யூர் செய்து ரசீது வாங்கிக்கொண்டான். அதன் பிறகு போஸ்ட் ஆபீசார் பணத்தையாவது சாமானை

யாவது திரும்பிக்கொடுக்க முடியாதென்றார்கள். போஸ்டல் டிபார்ட்மென்டார் தாங்கள் விலாஸதாரிடம் சாமானைக்கொடுத்து விட்டதாகவும் ஆனால் ஏதோ பிசகினால் அவனிடம் பணம் வாங்கவில்லையென்றும் சொன்னார்கள். அதன்பேரில் இவன் திருச்சி டிஸ்ட்ரிக்ட் முன்சிபு கோர்ட்டில் இந்தியா செகரடேரியின் (அதாவது சர்க்காரின்) மீது வழக்குத் தொடுத்தான். டிஸ்ட்ரிக்ட் முன்சிபு கேஸைத் தள்ளி விட்டார். வாதி சென்னை ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தான். பிரதிவாதி பக்ஷத்தில், 1898-ம் வருஷம் இந்தியன் போஸ்ட் ஆபீஸ் ஆக்டுப்படி, விலாஸதாரிடம் பணம் வாங்கப்பட்டாலொழிய மேற்படி தொகைக்கு இந்தியா செக்ரடேரி ஜவாப்தாரியாக மாட்டாரென்று விதி யிருப்பதால் கொடுக்கவேண்டியதில்லை என்று, வாதிக்கப்பட்டது. ஹைகோர்ட்டார் மேற்படி பண வசூலுக்கு இன்ஷ்யூரன்ஸ் விதிப்படி மேற்படியார் ஜவாப்தாரி யாகாவிட்டாலும் சமான்யச்சட்டப்படி பணம் வாங்காமல் பார்ஸல் கொடுத்ததற்காக இந்தியா செக்ரடேரி நஷ்டஈட்டுக்கு ஜவாப்தாரி யாகவேண்டும். அவர் ஒப்பந்தத்துக்கு அது மாறுபாடாயிருக்கிறது என்று அபிப்பிராயம் கொண்டு வாதிக்கு அனுகூலமாகவே தீர்ப்புச்சொல்லி அவனுக்கு சாமான். கிரயம் ரூபா 115-ம், கீழ்க்கோர்ட்டிலும் ஹைகோர்ட்டிலும் உண்டான வியாச்சியச் செலவு தொகையும் கொடுக்கும்படி விதித்தார்கள். [மித்திரன்]

### மைலாப்பூரில் கொலை.

எழும்பூர் சீப் பிரஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டின் முன்னம் ஜோஸப் என்ற ஒருவன் ஆறுமுகம் என்பவனைக் கொலை பண்ணியதற்காக ஜில்லா போலீஸ் சூபரின்டென்டென்டால் சார்ஜ் செய்யப்பட்டான். இறந்து போன ஆறுமுகத்தின் சோர நாயகி ஒரு சாக்ஷியாக வந்திருக்கிறார்கள். அவளை விசாரித்ததில் மேற்படி ஆறுமுகத்துக்கும் ஜோஸப்புக்கும் ஏதோ சண்டை நடந்ததாகவும் ஜோஸப் ஒரு திரிகைக்கல்லை எடுத்து ஆறுமுகம் தூங்கிக்கொண்டிருக்கும்போது இவன்மேல் கொண்டுபோட்டதாகவும் தான் விழித்துப் பார்த்தவுடன் ஆறுமுகத்தின் மேலெல்லாம் இரத்தம் ஓடிக்கொண்டிருந்தபடியால் தான் சத்த மிட்டதாகவும் சொன்னாள். மற்றச்சாக்ஷிகள் விசாரணையாகின்றன. [மித்திரன்]

### புலிப்பாறை.

வட ஆற்காடு ஜில்லா சித்தூருக்கு 12 மைல் வடக்குப் பெனுமூர் ரஸ்தாவில் குண்ட பல்லியென்ற கிராமத்தையடுத்து புலிப்பாறையென்று சாதாரணமாய் வழங்கும் ஒரு தனிப்பாறை நிற்கின்றது. இந்தப் பாறையினுச்சியில் புலிகுண்டு என்கிற குழியில் முன் ஒரு புலிவிழுந்தால் அது பெயர் பெற்றது. இந்தப் புலிகுண்டில் ஆறு மாதங்களுக்குமுன் ஒரு ரிஷிவந்து சக்கிரஸ்தாபனஞ் செய்துபோக அந்தச் சக்கிரத்தின் மகிமையால் ஜனங்களுக்குண்டாகும் எவ்வித வியாதியும் அகலுமென்றோர் வதந்தி பிறந்திருக்கிறது. இப்பொழுது சுமார்நான்கு மாதங்களாக இந்தப் பாறையண்டையில் பல ஸ்திரீகள் பிசாசு பிடித்தவர்கள் தங்கள் பிசாசு நிவர்த்தியைக்கருதியும் புரு



ஷர்கள் குஷ்டம், குன்மம், வாதம், அஜீர்ணம் முதலிய பல வியாதிகளின் நிவர்த்தியைக் கருதியும் திங்கட்கிழமைதோறும் வெகுவாய்க்கூடித் தேங்காய்களை நூற்றுக்கணக்காக உடைப்பதும் பெருமித அளவு கர்ப்பூர தீபமேற்றுவதுமாகச்செய்து வருகின்றனர். பிசாசு பிடித்த பெண்கள் தலைவிரித்தாடுவதும், பிசாசு நிவர்த்தியின் அடையாளமாகப் பெருங்கல்லுகளை அவர்கள் வாரி யெடுத்தோடுகிறதும், அடுக்கடுக்காய்ச் சிறுபெண்கள் பல கோரிக்கைகளோடு ஸ்னானஞ்செய்து ஈர ஆடையுடன் சுப்பிரமணியனை நினைத்துக் கவிழ்ந்து தரையிற் கிடக்க அக்கடவுள் வரங்கொடுத்தனுப்புவதாகச் சொப்பனங்கள் காண்பதுமாக இப்புலிப்பாறைச் சிலமாதங்களுள் பிசாசுப்பாறையாகிக் கீர்த்தி வாய்ந்து வருகின்றது.

### யுத்தம்.

ருஷ்யா தேசத்திற்கும் ஜப்பான் தேசத்திற்கும் சண்டை நேர்ந்து இது வரையிலும் ஜப்பானியரே ஜயங்கொண்டு வருகிறார்கள், இதுவரையில் அனேக சண்டைகள் நடந்தன. ஒரு சண்டையில் கூட ஜப்பானியர் தோல்வியடையவில்லை: ஜயித்தோங்குகிறார்கள். பிரமாண்டமாக இது வரையில் எண்ணப்பட்ட ருஷியாவின் பண்டவாளம் இப்போது தெரிந்து விட்டது. ஆனாலும் ருஷியாவை கேவலமாய் எண்ணப்படாது. இப்பூமண்டலத்திலுள்ள ராஜாக்களெல்லாம் அச்சப்பட்டுக்கொண்டிருந்த ராணுவ பலமுள்ளது ருஷியாதேசம், ஐரோப்பா அமெரிக்காக் கண்டங்களிலெல்லாம் ஜப்பானியரின் ஆண்மைக்கு மெச்சுகிறார்கள். வெகுவாய் ஜப்பானியருக்கே கடைசி வரையில் ஜயம் உண்டாகுமென்று நம்பப்படுகிறது. ஆனாலும் ஜப்பானியருக்கு அதிக ஆள்சேதமும் பணச்சேதமும் உண்டாகும்.

---

## ருஷ்ஷியா, ஜப்பான் யுத்தம்.

(மித்திரனிலிருந்து.)

### ராய்டர் தந்திகள்:

---

### ஜப்பானிய பீரங்கித் தோணி அமிழ்ந்து விட்டது.

லண்டன், அக்டோபர், 11—ஹெய்யன் என்ற பீரங்கிப்படகு 311-ஜனங்களுடன் போர்ட் ஆர்தருக்குச் சமீபத்தில் பிஜியன் கடலில் சென்ற செப்டம்பர் 18-ந்தேதி சுரங்கத்தில் தாக்கி அமிழ்ந்துவிட்டதாகவும் 4-பேர் தான் பிழைத்ததாகவும் டோகியோவில் அரசாங்கத்தார் பிரசுரித்திருப்பதாக அங்கிருந்து ராய்டர் தெரிவிக்கிறார். இதுவரை இவ்வர்த்தமானம் அடக்கிவைக்கப்பட்டதாம்.

உ

### ருஷியர் முற்பட்டு வருதல் நிறுத்தப்பட்டது.

ருஷியர் ஹாமின் நதியைக் கடந்து ஜப்பானிய ஜெனரலாகிய குரோகியைத் தாக்கி அவரது இடத்தைப் பற்றிக்கொண்டதாகவும், அதன்பேரில் ஜப்பானியருக்குத் துணைப்பலம் வந்து அதைத் திரும்பவும் கைப்பற்றிக்கொண்டு ருஷியரின் முற்படுதலை நிறுத்திவிட்டதாகவும் ரிபோர்ட் வந்திருக்கிறது. இரண்டு பக்கத்திலும் உயிர்ச்சேதம் ஜாஸ்தி.

### பால்டிக் படை.

லண்டன், அக்டோபர் 12—42 - கப்பல்களுடைய பால்டிக் படையானது லீவேவிட்டு விகோவுக்குப் புறப்பட்டு விட்டதாக செயிண்ட்பீடர்பர்க்கிலிருந்து ராய்டர் தெரிவிக்கிறார்.

### ருஷியர் சாஹோபூவைக் கைப்பற்றிக்கொண்டது.

யெண்டாய்க்கும் முக்டனுக்கும் இடையேயுள்ள சாஹோபூவை ருஷியர் கைப்பற்றிக்கொண்டது மெய்தானென்று தெரிகிறது. அதனை பின்னடைந்த சண்டையில் ருஷியருக்கு 100-பேர் சேதமாயிற்று. இந்தச்சண்டை நடக்கும்போது ஒரு புழுதிப்புயற்காற்று அடித்தது. ருஷியர்களின் முதுகுப்புறமாகவும் ஜப்பானியர் முகப்புறமாகவு இந்தப்புயற்காற்றடித்தது. குளிர் ஜாஸ்தியாக இருந்தது அநேகர் உறைபனியால் மாண்டனர்.

ஷாங்ஹேயிலிருந்து "டெயிலி டெலிகிராப்" பத்திரிகைக்கு வந்தசந்தியில் லயோயாங் வெற்றி ஜெனரல் கோடாமியால் உண்டாயிற்றென்று தெரிகிறது. மார்ஷல் ஒயாமா தலையிலிருந்து பின் வாங்கவேண்டுமென்று உத்தரவு கொடுக்க நாட்ஜு இன்னொரு பலமான முயற்சி செய்துதான் பார்க்கவேண்டுமென்று மன்றாடினாராம். ஆகையால் ஜப்பானியப்படை தண்டமுண்டாகும்படியின் வெற்றிக்குக் காரணமாக இருந்தவர் நாட்ஜுவே.

### மார்ஷல் ஒயாமா

மார்ஷல் ஒயாமா ஜப்பானுக்குத் திரும்பிவிடுவார், அல்லது வரவழைக்கப்படுவாரென்றும், அதன் காரணம் ஜப்பானியப்படை குளிர்கால ஜாகைகளுக்குப் போவதுதானென்று வெளிக்குச் சொல்லிக் கொள்ளப்படுமென்றும், ஜெனரல் நாட்ஜுவே படைத்தலைமை வகிப்பாரென்றும் மேலான இடங்களில் நம்பப்படுகிறது.

### யெண்டாயக் கருகில் யுத்தம்.

திங்கட்கிழமையும் செவ்வாய்க்கிழமையும் யெண்டாய்க்கு வடக்கே உக்கிரமான யுத்தம் நடந்ததென்றும் இருதிறத்தாருக்கும் சேதம் ஜாஸ்தியென்றும், முக்டனிலிருந்து ருஷியப்பத்திரிகைகளுக்கு வந்த கடிதங்களால் தெரிகிறது. ஜயமின்னதென்பது சந்தேகத்திலிருக்கிறது. செவ்வாய்க்கிழமை இரவு யெண்டாய்க்கருகில் ருஷியரே நின்றதாகத் தெரிகிறது.

ஜெனரல் ஒகுவுடனிருக்கும் ராய்டர் நிருபர் சனிக்கிழமையன்று தந்தியடித்ததில் மார்ஷல் ஒயாமாவுக்கு ருஷியர் தமது இடங்களைப் பலப்படுத்தும் சமாசாரம் தெரிந்தவுடன் தமது சைனியத்தை முன்செல்ல உத்தரவு செய்தாரென்று தெரிகிறது.

144689
m 211, N8.4 U
N84.1.1

# கைகண்ட அவிழ்தங்கள்.

தந்ததாவணப்பொடி:—வாய்நாற்றம், பல்லில் சீழ்இரத்தம்வருதல், ஈர் வளர்தல் பல்ஜிலுஜிலுப்பு முதலிய தந்தரோகங்களை நீக்கி பற்களைப்பலப்படுத்தும். 1 டப்பி 4-அணா.

தாம்பூலமாத்திரை:—தலைபாரம், சீதளம், ஜலப்பு, பல்லசைவு, பல்குத்தல், சயித்தியம் அனுகா. கர்ப்பஸ்திரீகள் உபயோகிக்கின்வாதபித்த நீர்களை யனுகவொட்டாமலும் இரேக பாரமில்லாமலும் சீதள அருசையிராமலும் கைகால் நோயில்லாமலும் காக்கும். 100 மாத்திரை ரூ. 1.

கூந்தல் வளர் தைலம்:—சிவந்த மயிர் கருக்கும். உதிர்ந்த இடத்தில் மயிர்முளைக்கும். கண்டு, மயிர்வெடிப்பு, மயக்கம், தலைசுழற்றல் முதலிய நீங்கும். மயிர்செழிப்பாயும் அடர்த்தியாயும் வளரும். கண்களுக்கும் மூளைக்கும் குளிர்ச்சியைத்தரும். சுகமான நித்திரையைத்தரும். 1 டப்பி ரூ. 1.

மதனலீலாவ்ஜேதலேகியம்:—சுண்டைக்காயளவு காலைமாலைபுசித்தால் தாதுக்ஷீணம் நீங்கும். ஆண்தன்மை பெருகும். விதையாறுபோக இன்பம் விசேஷமாயனுபோகிக்கலாம். இதன்பெருமை சொல்லிமுடியாது. பரிசோதித்துப்பார்க்கின் ஸ்ரீயமாய் விளங்கும். 1 டப்பி ரூ. 2.

போகசேதந வெள்ளை:—சிற்றின்பவிஷயத்தில் சம்பந்தப்பட்டவுடன் ஒருமாத்திரையைத்தின்றுபால் அல்லது ஜலம்சாப்பிட்டால் உதிரும் உண்டாகும் நீர்கடுப்பு, கைகால் அசதி உஷ்ணம் இவை நீங்கி 10 நிமிஷத்தில் சிற்றின்பப்பிரியமுண்டாக்கும். 20 மாத்திரை ரூ. 1.

மாஜிக்பாம்:—தலைநோய், ஒற்றைத்தலைநோய், புறக்கழுத்துவலி, இருமல், மார்சளி, சயம், இடுப்புநோய், பக்கவலி, பாரிசவாய்வு புடிப்பு, முதலியவைகளை, பறக்கடிக்கும், தேள் பூரான்கட்டுவெக்காலி கொட்டியிடத்தில் இத்தைலத்தைத்தடவி தேய்த்தால் சுகமாகும். பல்நோய், பல்குத்தல், பல்ஜிலுஜிலுப்பு உள்ள இடத்தில் ஒரு பொட்டுவைத்தால் உடனே சொஸ்தமாம்,

1-புட்டியின் விலை ரூ 1.

கே. சங்கரன் அண்டு கோ.

தங்கசாலை போஸ்டு

மதராஸ்

---

ஆர். சாரங்கபாணி அண்டு கோ.

ரப்பர் ஸ்டாம்பு மேகர்ஸ்

சௌகார்பேட்டை